இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 - முரசு: 82 - ஒலி: 75 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - ஐப்பசி 07 - செவ்வாய்க்கிழமை 24 அக்டோபர் 2023 - வெளியீர் 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 75: Thiruvalluvar Year - 2054 - Ayyapsi 07 - Tuesday 24 October 2023 - Dak 16 Pages ₹ 5.00

## வரும் நாடாளுமன்றத் தேர்தல் களம்;

# இந்தியாவைக் காத்திட வெற்றிக்கனி பறிப்போம்!

## திருவண்ணாமலையில் வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**திருவண்ணாமலை, அக். 24 -**

**திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல வாக்குச் சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "வரும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் இந்தியாவைக் காத்திட வெற்றிக்கனி பறிப்போம்' என்று உறுதிபடக் கூறினார்.**

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (22-10-2023) திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

நாடாளுமன்றக் களம் நமக்காக காத்திருக்கிறது. வெற்றிக் கனியைப் பறிக்க, அந்தத் தேர்தல் பணிக்கான தொடக்கப்புள்ளியான வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தை நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம். மத்திய மண்டல மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்கள் கூட்டம் திருச்சியிலும் தென் மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் இராமநாதபுரத்திலும் மேற்கு மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் திருப்பூரிலும் நடந்தது. இப்போது உங்களுடைய முகங்களை பார்ப்பதற்காகவே இந்த வடக்கு மண்டல மாநாட்டிற்கு கழகத்தின் கோட்டையாக விளங்கும் திருவண்ணாமலைக்கு நான் வந்திருக்கிறேன்.

**"சீக்ரெட் ஆப் மை எனர்ஜி"!**

ஒளி மிகுந்த ஊரில் உங்கள் முகங்களில் எல்லாம் உதயசூரியனின் ஒளியை பார்க்கிறேன். தினமும் காலையில் சூரிய ஒளியை பார்க்கும்போது என்ன மாதிரியான உற்சாகம் ஏற்படுமோ, அதே மாதிரியான உற்சாகம் தான் உங்களை பார்க்கும்போதும் ஏற்படுகிறது! உற்சாகம் என்று சொல்வதைவிடப் புதியதொரு உணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படுகிறது என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! ஒரு நாள் முழுவதும் - ஒரு வாரம் முழுவதும் ஒய்வில்லாமல் உழைத்தாலும், அடுத்த நாள் கழக உடன்பிறப்புகளின் இருக்கப்போகிறோம் என்ற எண்ணம் வந்துவிட்டாலே புதிதாக ஒரு எனர்ஜி வந்துவிடும். ஏன் என்றால், நீங்கள் தான் "சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி!" இந்தப் பாசப்பிணைப்பை 'உடன்பிறப்பே...' என்ற ஒரே ஒரு சொல் மூலமாக உருவாக்கிக் கொடுத்தவர் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலையில் நடைபெற்ற, வடக்கு மண்டல கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு, அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை. துணை அமைப்புச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆஸ்டின், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தரணி வேந்தன், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையும் தீபமும் போலதான், திருவண்ணாமலையும் தி.மு.க.வும்! யாராலும் பிரிக்க முடியாது! பல்வேறு வரலாற்றை நம்மடைய பொதுச் செயலாளர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, இரண்டை மட்டும் உங்களுக்கு நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

நம்முடைய கழகம் உருவான அன்று நடந்த முதல் பொதுக்கூட்டத்தில் 1,451 ரூபாய் வசூலானது. அதில் 100 ரூபாய் இதே திருவண்ணாமலையை சேர்ந்த நம்முடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ப.உ. சண்முகம் அவர்கள் வழங்கியது. 1957 தேர்தலில் நாம் முதன் முதலாக போட்டியிட்டு 15 பேர் வெற்றி பெற்றோம். அதில், 3 பேர் இந்த மாவட்டத்துக்காரர்கள்! முதல் நாடாளுமன்றத் தேர்தலில் 2 பேர் வெற்றி பெற்றார்கள். அதில் ஒன்று, இந்த திருவண்ணாமலை தொகுதி! சட்டமன்றத்துக்கு, ப.உ. சண்முகம், பி.எஸ்.சந்தானம், களம்பூர் அண்ணாமலை! நாடாளுமன்றத்திற்கு, இரா.தர்மலிங்கம்! இன்றைக்கும் இவர்கள் பெயரை வரலாறு சொல்லிக் கொண்டு இருக்கிறது! அப்படிப்பட்ட நம்முடைய ப.உ.ச. அவர்களுக்கும் இரா.தர்மலிங்கம் அவர்களுக்கும் கொஞ்சம் நாட்களுக்கு முன்புதான் நம்முடைய வேலு அவர்களின் சீரிய முயற்சியில் மாவட்டக் கழகம் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடியது!

அண்ணன் துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல, 1963இல் தி.மு.க.விற்கு திருப்புமுனை தந்தது திருவண்ணாமலை இடைத்தேர்தல்! அப்போது ஆளுங்கட்சி, காங்கிரஸ்! நம்முடைய வேட்பாளர், ப.உ.ச. அவர்கள்! தேர்தல் பொறுப்பாளர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! அன்றைக்கு திருவண்ணாமலை கொடுத்த வெற்றிதான், 1967இல் நாம் ஆட்சி அமைக்க அடித்தளமாக அமைந்தது!

**வெற்றி தீபத்திற்கு அடித்தளம் அமைத்த தி.மு.க.!**

அதேபோல், 2021 தேர்தலின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தது, வரவேற்புரை ஆற்றுகிறபோது வேலு அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார், 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' பயணத்தையும் இதே திருவண்ணாமலையில் இருந்துதான் நான் தொடங்கினேன். தொகுதி தொகுதியாகச் சென்று கோரிக்கை மனுக்களை வாங்கினேன். "உங்கள் கவலைகளை, கோரிக்கைகளை, எதிர்பார்ப்புகளை என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள். ஆட்சி அமைந்ததும் 100 நாட்களில் தீர்வு காண்பேன்" என்று சொன்னேன். ஸ்டாலினிடம் மனு கொடுத்தால் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு, இலட்சக் கணக்கான மக்கள் மனு கொடுத்தார்கள். அந்த அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் வெள்ளம்போல் மக்கள் திரண்டார்கள். அன்றைக்கு வெற்றித் தீபத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் பெறுவதற்கு அடித்தளம் அமைத்தது, திருவண்ணாமலை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### கடமைகளை மறந்துவிடாதீர்!

பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் உங்களுக்கு நிறைய கடமைகள் இருக்கிறது. நீங்கள் மறந்துவிட கூடாது.

**★ வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, முதல் பணி! வாக்காளர் பட்டியலில் உங்கள் வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர்களின் விவரங்கள் சரியாக இருக்கிறதா, யாராவது போலி வாக்காளர்கள் இருக்கிறார்களா, இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கிறதா என்று முழுவதுமாகச் சரிபார்க்கும் கடமை உங்களுடையது.**

**★ வாக்காளர்களை சந்தித்து, பிரச்சாரம் பரப்புரை மேற்கொள்வதும், நம்முடைய சாதனைகளை அவர்களிடம் தொடர்ந்து எடுத்துச் சொல்வதும் இரண்டாவது பணி!**

**★ வாக்குப்பதிவு நாட்களில் வாக்காளர்களை வாக்குப் பதிவு மையங்களுக்கு வரவைப்பது மூன்றாவது பணி! இது மிகமிக முக்கியமான பணி!**

---

## தமிழ்நாட்டிற்கு 'நீட்' தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்!

# சாதிவாரி கணக்கெடுப்பு கண்டிப்பாக தேவை!

## முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கருத்து!

*புதுக்கோட்டை, அக்.24-*

சாதிவாரி கணக்கெடுப்பு கண்டிப்பாக தேவை என்று ப.சிதம்பரம் கூறினார். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கொத்தமங்கலத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் நேற்று முன்தினம் அளித்த பேட்டி வருமாறு:-

கொரோனா காலத்தில் 2 ஆண்டு காலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்காமல் இருந்தது. இதனால் பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போனது. சாதிவாரி கணக்கு என்பது கண்டிப்பாக தேவை. இதன் மூலம் அரசு வேலைகளில், பள்ளி கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யலாம்.

நாடாளுமன்றத்தில் கூட ஒரு எம்.பி. புலிகள், யானைகளை கூட கணக்கீடு செய்யப்படுகிறது என்று வேடிக்கையாக சொன்னார். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வறுமையில் இருக்கிறார்கள் என்பது கணக்கெடுத்தால்தான் தெரியும்.

பத்தாண்டுக்கு ஒரு முறை எடுக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பையே ஒன்றிய அரசு எடுக்கவில்லை. இதை 2021லேயே எடுத்திருக்க வேண்டும். நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் எனது கருத்து.

தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க. ஆரம்ப காலத்தில் இருந்து வைக்கும் கோரிக்கை. தமிழ்நாட்டில் ஏறத்தாழ அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட கோரிக்கை இது. நீட் தேர்வு இல்லாமல் தான் புகழ்பெற்ற மருத்துவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். தி.மு.க.வினர் கையெழுத்து இயக்கத்தை ஜனநாயக முறைப்படி நடத்துகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

## காத்மாண்டுவில் நில நடுக்கம்!

### 95 வீடுகள் இடிந்தன!

காத்மாண்டு, அக்.24 –

நேபாள் தலைநகர் காத்மாண்டுவில் நேற்று காலை 7.39 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.1 அளவில் பதிவான அந்த நிலநடுக்கம் தாடிங் மாவட்டத்தை மையமாக கொண்டு ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்தது. அதன் அதிர்வுகள் பாகமதி மற்றும் கண்டகி மாவட்டங்களிலும் உணரப்பட்டது. அதன் பின் 3 முறை லேசான அதிர்வுகள் பரவலாக உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் தாடிங் மாவட்டம் ஜுவாலாமுகி முனிசிபாலிட்டியில் உள்ள 20 வீடுகள் தரைமட்டமானதுடன், 75 வீடுகளின் சுவர்கள் இடிந்துள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். நிலநடுக்க சேதம் பற்றிய தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

---


## ஓமன் - ஏமனுக்கு இடையே கரையைக் கடக்கும்!

# மிகத் தீவிர புயலாக உருவெடுக்கிறது 'தேஜ்'!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக். 24 -

கடந்த 19ம் தேதி காலை தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, அன்றைய நாள் நள்ளிரவிலேயே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக தென்மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவியது.



இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, தென் மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் புயலாக உருவெடுத்தது. தென்மேற்கு அரபிக் கடலில் உருவாகியுள்ள இந்த புயலுக்கு 'தேஜ்' என பெயரிடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், இந்த புயல் நேற்று முன்தினம் தீவிர புயலாக வலுவடைந்ததாக வானிலை ஆய்வுமையம் அறிவித்திருந்தது. மேலும் இந்த புயலானது அதி தீவிர புயலாக மாறி, நாளை (25ம் தேதி) அதிகாலை ஓமன் மற்றும் ஏமன் இடையே கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தென்மேற்கு அரபிக் கடலில், நிலைகொண்டுள்ள இந்த அதிதீவிர 'தேஜ்' புயல், நேற்று மிகத் தீவிரப் புயலாக வலுப்பெற்றது.

இது நாளை அதிகாலை ஓமன் மற்றும் ஏமனுக்கு இடையே கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 24-10-2023

# அரசும் ஆலயங்களும் 2

★ உண்டியலில் சேகரிக்கப்படும் பணம், தனி வங்கிக் கணக்கில் இருக்கும். அந்தந்த மாதம் கோவிலுக்குத் தேவையான செலவுக்கு இந்த தனி வங்கிக் கணக்கில் இருந்து கோவிலுக்கான அன்றாட நடைமுறை வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படும். உண்டியல் பணத்தை கோவில் அதிகாரி நிரந்தர வங்கிக் கணக்கிலேயே வைத்திருப்பார்.

★ வடபழநி ஆண்டவர் திருக்கோவில் உண்டியல் காணிக்கை நிதி தனி வங்கிக் கணக்கில் பல கோடி ரூபாய் இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள சில பெரிய கோவில்களின் வங்கிக் கணக்கில் பல நூறு கோடி ரூபாய் வரை நிரந்தர வைப்பு நிதியாக இருப்பதையும் நானறிவேன். இப்பணத்தை யாரும் எடுக்கவோ, வேறு பயன்பாட்டிற்கு மாற்றவோ முடியாது. அதற்கு வழியுமில்லை.

★ உண்டியலில் சேகரிக்கப்படும் உலோகங்கள் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு, தங்கம் தனியாக கட்டப்பட்டு கோவில் லாக்கரில் பாதுகாக்கப்படுகின்றன. இவையும் மூன்று அதிகாரிகள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு அதற்கான சாவிகள் வெவ்வேறு அலுவலகங்களில் தனித்தனியாக பராமரிக்கப்படுகின்றன. லாக்கரை தனியாகச் சென்று யாரும் திறக்க முடியாது. சாவி பெறுவதற்கே கடும் விதிகளும் நடைமுறைகளும் உள்ளன.

★ ஒரு பக்தர் குறிப்பிட்ட வேண்டுதலுக்காக, அதாவது வேல், கிரீடம் செய்ய தங்கமோ வெள்ளியோ காணிக்கையாக கொடுத்திருந்தால் அவற்றை வேறு காரணங்களுக்காக பயன்படுத்த முடியாது.

★ உண்மை நிலை இவ்வாறு இருக்க ... ஒரு சிலர் அவரவர் கற்பனைச் சிந்தனைக்கு ஏற்றாற்போல உண்டியல் காணிக்கைகள் இந்த அமைச்சருக்கு பத்து சதவிகிதம் போகிறது அந்த அமைச்சருக்கு 10 சதவிகிதம் போகிறது எனச் சொல்வது அவர்களின் அறியாமையன்றி வேறில்லை.

★ ஒரு சிலர் சொல்வதைப் போல கோவில் பணம் வேறு எங்கும் போய்விடாது.

இவை அனைத்தும் ‘தினமலர்’ நிர்வாகி ஆதிமூலத்தின் வாக்குமூலங்கள் தான். உண்டியல் பணம் எவ்வளவு பாதுகாப்பாக கையாளப்படுகிறது என்ற 15 வழிமுறைகளையும் அவர் வரிசைப்படுத்தி இருக்கிறார். இதன்பிறகும் ஒரு கூட்டம், கோவில் நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்று கூக்குரல் இடுவது அவர்களது சுயநலமே தவிர வேறல்ல.

**“கோவிலை விட்டு அரசே வெளியேறு என்று சொல்லும் மூன்று பேர் கோவில் நிலத்தை ஆக்கிரமித்திருந்தார்கள். அவர்களிடம் இருந்து நிலத்தை மீட்டுள்ளோம்” என்று அறநிலையத் துறை அமைச்சர் சொல்லி இருந்தார். இது தான் இந்த பொய் பிரச்சாரத்துக்கு பின்னால் இருக்கும் உள் நோக்கம் ஆகும்.**

**கோவிலை சுத்தம் செய்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதும், கோவில் ஓதுவார்களாக பெண்கள் வருவதும், தமிழில் வழிபாடு செய்யலாம் என்பதும் சிலருக்கு எரிச்சலாக இருக்கிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதும், கோவில்கள் அனைத்திலும் கேமராக்கள் பொருத்துவதும், அனைத்து ஆவணங்களையும் இணையத்தில் வெளியிடுவதும் சிலரை கோபம் கொள்ள வைக்கிறது. யாரெல்லாம் கோவில் சொத்துகளை ஆக்கிரமித்திருந்தார்கள், யாரிடம் இருந்தெல்லாம் மீட்டுள்ளோம் என்பதை புத்தகமாகப் போட்டு வழங்கி வருகிறார் அமைச்சர் சேகர்பாபு. இது பா.ஜ.க. தலைமை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தான், ‘கோவிலைவிட்டு அரசே வெளியேறு’ என்று கிளம்புகிறார்கள்.**

கோவிலை விட்டு அரசே வெளியேறு என்பதைப் போல மருத்துவமனைகளை விட்டு அரசே வெளியேறு கல்லூரிகளை விட்டு அரசே வெளியேறு சிலர் கிளம்பினால் என்ன ஆகும்?

கோவில்களை அரசு தான் நிர்வாகம் செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்தவர்களும் பக்தர்கள். மதுரையைச் சேர்ந்த தரும இரண்டன சபை அல்லது அறக்கட்டளை பாதுகாப்புச் சங்கம் என்ற அமைப்பு 1907 முதல் வலியுறுத்திவந்த கருத்து இது. பெரும்பாலும் பார்ப்பன வழக்கறிஞர்கள் இருந்த அமைப்பு இது. இந்த கோரிக்கையைத் தான் பழுத்த பக்தரான அன்றைய முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் 1927 ஆம் ஆண்டு நிறைவேற்றினார்கள். இவர் சமஸ்கிருத பண்டிதர். இந்த சட்டமுன் வடிவை உருவாக்கிக் கொடுத்தவர் அன்றைய சட்ட மன்றத்தின் சிறப்பு உறுப்பினராக இருந்த என்.கோபாலசாமி அய்யங்கார் அவர்கள். இவர் பிற்காலத்தில் பிரதமர் நேருவின் அமைச்சரவையில் அமைச்சராக இடம்பெற்றார். நீதிக்கட்சி காலத்தில் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுவுக்குத் தலைவராக இருந்தவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக (191221) இருந்த சர்.டி.சதாசிவ அய்யர் அவர்கள்.

இந்த சட்டத்தை 1948 ஆம் ஆண்டு செம்மைப்படுத்தியவர் அன்றைய முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி அவர்கள். இவர் ரமண மகரிஷியின் சீடர். ஒருநாளைக்கு ஆறு முறை வழிபாடு செய்பவர். பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில் தான் இச்சட்டத்தில் இருந்த ஒருசில ஓட்டைகள் கூட அடைக்கப்பட்டன. பழுத்த ஆத்திகரான பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் அறநிலையச் சட்டத்தை கடுமையாகக் கடைப்பிடித்தார். இதன் தொடர்ச்சியாக தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.

1927 ஆம் ஆண்டு முதல் இருக்கும் நடைமுறை இது. மாண்புமிகு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பிறகு தான் ஏதோ கோவில்களை அரசு எடுத்துக் கொண்டதைப் போல பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் பேசியது, ‘வாட்ஸ் அப்’ வதந்தி வரலாறே தவிர உண்மை வரலாறு அல்ல.

**பழுத்த ஆத்திகர் எப்போதும் குங்குமப் பொட்டுடன் காட்டியளித்தவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலராக இருந்தவர் மறைந்த மரியாதைக்குரிய பெரியவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராசன் அவர்களிடம், “இந்து கோவில்கள் மட்டும் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இருப்பது போல், சர்ச்சுகளும் பள்ளிவாசல்களும் ஏன் அரசின் வசம் இல்லை?” என்று கேட்டார்கள்.**

**அவர் சொன்னார்: ‘ராஜாங்கங்களும், சமஸ்தானமும் அரசுடமை ஆகியது போல அரசர்கள் கட்டிய கோவில்கள் அரசு வசம் வந்துள்ளது. ஆதீனங்களும், மடங்களும் இன்றும் சுயமாக இயங்குவதைப் போல தனியார்களால் உருவாக்கப்பட்ட சர்ச்சுகளும் பள்ளிவாசல்களும் சுயமாக இயங்குகின்றன’ என்றார். இதை விட வேறு தீர்ப்பு இருக்க முடியுமா?**

உண்மையான பக்தர்களின் கோரிக்கையைத்தான் செயல்படுத்தி வருகிறோம். பகல் வேஷக்காரர்கள் அதனால் தான் பயப்படுகிறார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். உடன் கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே.கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்தார். உடன் கழகப் பொதுச்செயலாளர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே.கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்து, மருத்துவ மாணவ, மாணவியர்களுக்கு கையடக்க மடிக்கணினிகள் வழங்கினார். உடன் கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே. கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## திருவாரூரில் மாபெரும் பாட்டுமன்றம் - கவியரங்கம் - கருத்தரங்கம்!

*திருவாரூர், அக்25-*

*திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு சிறப்பு பாட்டுமன்றம், கருத்தரங்கம், கவியரங்கம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற விழாவில் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாநில இளைஞர் அணி செயலாளர் ந.இளையராஜா, நகரச் செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றியச் செயலாளர்கள்வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பாலஞானவேல், நகர்மன்றத் தலைவர் திருமதி கவிதா பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*திருத்துறைப்பூண்டி நகரம் ஸ்ரீ கிருஷ்ணா அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்க, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண் மணி வரவேற்புரையாற்றினார்.*

*மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றியச் செயலாளர் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், நகர்மன்றத் தலைவர் திருமதி கவிதா பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வஜெயதேவன், கலைவாணி மோகன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.*

*தொலைக்காட்சி புகழ் பேராசிரியர் கோ.பழனி தலைமையில் “அன்றும்... இன்றும்... என்றும்... கலைஞர்” எனும் தலைப்பில் பாட்டுமன்றத்தில் மணப்பாறை லலிதா பரமேஸ்வரி, காரைக்கால் யோகதர்ஷினி, மாஸ்டர் அன்னவாசல் டி.டி.தேவதர்ஷன் ஆகியோர் பங்கேற்றனர். கவிஞர் இள. செல்வமணி, இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் நல்லாசிரியர் செல்லத்துரை ஆகியோர் பங்கேற்ற கவியரங்கமும், கவிஞர் உதயகுமார், வரம்பியம் முகமது முஸ்தாக் ஆகியோர் பங்கேற்ற கருத்தரங்கமும் நடைபெற்றது.*





# கோடிக்கணக்கான தமிழ்க் குடும்பங்களை வாழ வைக்கும் தி.மு.க. குடும்பக் கட்சிதான்!

## தலைவர் - முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி...

முதல் பக்கத் தொடர்ச்சி...

தான் என்பதை பெருமையோடு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்!

**விழாவேந்தன் வேலு!**

இந்த பாக முகவர்களின் வடக்கு மண்டல மாநாட்டை எழுச்சியோடும் ஏற்றத்தோடும் அருணாசலம் நகரில் இருக்கும் கலைஞர் பெயரால் அமைந்த திடலில் நடத்திக் காட்டியிருக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய எ.வ.வேலு அவர்களுக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். “எதையும், யாரும் ஏவாமலேயே செய்யக் கூடியவர் வேலு” என்று தலைவர் கலைஞர் அவர்கள் பாராட்டினார். திருவாரூரில் கலைஞர் கோட்டம் மதுரையில் கலைஞர் நூலகம் சென்னையில் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை இதெல்லாம் எவ்வாறு அமைய வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அதே மாதிரி, அழகோடும் கம்பீரத்தோடும் அமைத்தவர்தான் நம்முடைய அன்புக்குரிய வேலு அவர்கள்! கழகத்தின் ‘விழா வேந்தன்’ என்றால் அது, வேலுதான் என்று திருவண்ணாமலை கலைஞர் சிலை திறப்பு விழாவில் நான் சொன்னேன். அப்படிப்பட்ட அவரோடு தோளோடு தோள் நின்று பணியாற்றும் ஒருங்கிணைந்த திருவண்ணாமலை மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு தலைமைக் கழகத்தின் சார்பிலும் - என்னுடைய முறையிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மார்ச் 22ஆம் நாள் அண்ணா அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடந்தது. அதில் இருந்தே நாம் தேர்தல் பணிகளை நாம் தொடங்கிவிட்டோம். தமிழ்நாடு முழுவதும் பூத் கமிட்டிகளை அமைத்திருக்கிறோம். இதோடு நான்கு வாக்குச் சாவடி முகவர்கள் மாநாட்டை நடத்தியிருக்கிறோம். இன்னும் சென்னை மண்டலம் மட்டும்தான் பாக்கி இருக்கிறது.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப் பட்டார்கள். கோடிக்கணக்கான உறுப்பினர்கள் உள்ள நம்முடைய இயக்கத்தில் பல கட்ட ஆய்வுகளுக்குப் பிறகே ‘வாக்குச்சாவடி பொறுப்பாளர்’ என்ற அடையாள அட்டை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் பெற்றிருக்கும் உங்களை எல்லாம் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

உங்களுக்கான வகுப்புகள் காலை முதல் மாலை வரை - நாங்கள் வரும் வரை நடந்திருக்கிறது. ’வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும்’ என்ற தலைப்பில் நம்முடைய கழகத்தின் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி., அவர்களும் ’வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்துவம்’ குறித்து நம்முடைய அருமைச் செயல்வீரர் நந்தகுமார் அவர்களும் - ’சமூக வலைத்தளங்களின் பயன்பாடும், செயல்படுத்த வேண்டிய முறையும்‘ என்பது குறித்து அருமைத் தம்பி எஸ்.கே.பி. கருணா அவர்களும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். கழகத்தின் வரலாறு, அடிப்படைக் கொள்கைகள், திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள், நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்த முயற்சிகள் - திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்த அடிப்படை தகவல்களை நம்முடைய பேரன்பிற்குரிய லியோனி அவர்களும் மருத்துவர் எழிலன் அவர்களும் உங்களுக்கு எடுத்து மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.

இவர்கள் மூலமாக கொள்கை வழிகாட்டுதலும் - தேர்தல் பயிற்சியும் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது எல்லாவற்றையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும். இதெல்லாம் இந்தத் தேர்தலுக்கு மட்டுமல்ல, எல்லா தேர்தலுக்கும் பயன்படுத்த வேண்டிய பணிகள்!

திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள்.

உங்களை எல்லாம் ஒருங்கிணைத்து, அழைத்து வந்திருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்களான, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் காந்தி, அமைச்சர் மஸ்தான், தா.உதயசூரியன், நந்தகுமார், புகழேந்தி, தடங்கம் சுப்பிரமணி, ஒய்.பிரகாஷ், தேவராஜி, வசந்தம் கார்த்திகேயன், தரணிவேந்தன், மதியழகன், பழனியப்பன் என அனைவர்க்கும் என்னுடைய நன்றியை தலைமைக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்!

**வெற்றி ஒன்றுதான் உங்கள் இலக்கு!**

வாக்குச்சாவடி பொறுப்பாளர்களான நீங்கள்தான் உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் வாக்காளர்களுக்கு முழு பொறுப்பாளர். வாக்குச் சாவடிப் பொறுப்பாளர் என்றால், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கும் நீங்கள்தான் பொறுப்பாளர்! மறந்துவிடாதீர்கள்! உங்களை நம்பித்தான் ‘நாற்பதும் நமதே! நாடும் நமதே!’ என்று நான் கம்பீரமாக முழங்குகிறேன்! அதே கம்பீரத்தோடு இன்று முதலே நீங்களும் தேர்தல் பொறுப்பாளராக கடமையாற்ற வேண்டும்! அந்த வகையில் வெற்றி ஒன்றுதான் உங்களின் இலக்காக இருக்க வேண்டும். இந்த வெற்றியை அடைவதற்கான வழிமுறைகளில் நீங்கள் மிகச்சரியாக செல்ல வேண்டும்!

**கடமைகளை மறந்துவிடாதீர்!**

பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் உங்களுக்கு நிறைய கடமைகள் இருக்கிறது. நீங்கள் மறந்துவிட கூடாது.

*** வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, முதல் பணி! வாக்காளர் பட்டியலில் உங்கள் வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர்களின் விவரங்கள் சரியாக இருக்கிறதா, யாராவது போலி வாக்காளர்கள் இருக்கிறார்களா, இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கிறதா என்று முழுவதுமாகச் சரிபார்க்கும் கடமை உங்களுடையது.**

*** வாக்காளர்களை சந்தித்து, பிரச்சாரம் பரப்புரை மேற்கொள்வதும், நம்முடைய சாதனைகளை அவர்களிடம் தொடர்ந்து எடுத்துச் சொல்வதும் இரண்டாவது பணி!**

*** வாக்குப்பதிவு நாட்களில் வாக்காளர்களை வாக்குப்பதிவு மையங்களுக்கு வரவைப்பது மூன்றாவது பணி! இது மிக மிக முக்கியமான பணி!**

உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் நீங்கள் ஒருவராக மாற வேண்டும். முதலில், உங்கள் வாக்குச் சாவடியில் இருக்கும் ஒவ்வொருவரை பற்றியும் முழுவதுமாக தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அதற்கான மாதிரிப் படிவம்தான் இப்போது, உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தொகுதிவாரியாக அச்சிடப்பட்டு உங்களிடம் சீக்கிரமாக வந்து சேரும். வாக்காளரின் பெயர், வயது, அவர்கள் குடும்பத்தினர் யார்

## தினமும் ஒரு மணி நேரம் கழகத்துக்காக ஒதுக்குங்கள்!

யார், என்ன படித்திருக்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள், எந்தக் கட்சியை சார்ந்தவர் என்ற முழு விவரமும் உங்களிடம் இருக்க வேண்டும். தினமும் ஒருமணி நேரத்தைக் கழகத்துக்காக ஒதுக்குங்கள். ஒதுக்குவீர்களா?

**அரசின் திட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள்!**

அடுத்ததாக, அரசின் திட்டங்களையும் முழுமையாகத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கும் புத்தகத்தைப் படித்துப் பார்த்தாலே அரசின் திட்டங்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்துவிடும். யாருக்கு என்ன தேவையோ அதை பெற்றுத் தாருங்கள். முதியோர் உதவித் தொகை, பட்டா மாறுதலில் உதவி, இவ்வாறு என்ன உதவி தேவை என்று கேட்டு நிறைவேற்றித் தாருங்கள். இதனைச் செய்து தர உங்கள் பகுதியின் ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்களையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ அல்லது அமைச்சர்களையோ நீங்கள் அணுகுங்கள்.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கொண்டு வரும் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று எல்லோரிடமும், குறிப்பாக அமைச்சர்களிடமும் கட்டாயமாகச் சொல்லுவேன். நீங்கள் கொண்டு வரும் தகுதி வாய்ந்த கோரிக்கைகள் கட்டாயம் நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை நான் இங்கு அழுத்தம் திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன்.

ஒவ்வொரு நாளும் பத்து வீட்டுக்குப் சென்று பேசுங்கள். ஒரு மாதத்தில் உங்கள் பூத்தில் இருக்கும் அத்தனை வீட்டிற்கும் சென்று வந்துவிடலாம். ஒரு சிலர் வரவேற்கவில்லை என்றாலும் திரும்ப திரும்ப செல்லுங்கள். நம்முடைய சாதனைகளை எடுத்துச் சொல்லிப் புரிய வையுங்கள். எல்லார்க்கும் பொதுவான மக்களாட்சியை நாம் நடத்திக் கொண்டு வருகிறோம். நம்முடைய திட்டங்களால் தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒருவிதத்தில் பயனடைகிறது. அப்படி பார்த்து பார்த்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். இதனால் மக்கள் நம்முடைய ஆட்சிமீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

**கோடிக்கணக்கான பெண்களுக்கு பயனளிக்கும் திட்டம்தான் மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம்!**

**ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.**

**42 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெற்றுவரும் 1000 ரூபாய் உதவித்**

## “பச்சைப் பொய்யர்” பழனிசாமி!

**தொகையை 1200 ரூபாயாக ஆக்கி இருக்கிறோம்.**

**18 லட்சம் பள்ளி மாணவ மாணவியர்க்கு காலை உணவுத் திட்டம்!**

**13 லட்சம் பெண்களின் நகைக்கடன் ரத்து!**

இவ்வாறு கோடிக்கணக்கான - இலட்சக்கணக்கானவர்கள் பயன்பெறும் திட்டங்களை நிறைவேற்றுகிற அரசுதான், நம்முடைய திராவிட மாடல் அரசு! இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய திட்டங்கள் மூலமாக பயனடைந்தவர்கள், ஊடகங்களில் தரும் பேட்டிகளில் உள்ளத்தில் இருந்து பேசுகிறார்கள். அது மகிழ்ச்சியாக இருக்கிறது.

**1000 ரூபாய் மகளிரை ஈர்த்துள்ளது.**

தேர்தலுக்கு முன்பு இருந்ததைவிட, ஐந்து, ஆறு மாதங்களுக்கு முன்பு நான் சுற்றுப்பயணம் செய்தபோது இருந்த மகிழ்ச்சியைவிட, உணர்ச்சியைவிட, வரவேற்பைவிட இப்போது கடந்த இரண்டு மாதகாலமாக எங்கு பார்த்தாலும் பெண்கள் அலைமோதுகிற அந்தக் கூட்டத்தை நான் கண்கூடாக பார்க்கிறேன். என்ன காரணம்? 1,000 ரூபாய். அது இன்றைக்கு மகளிரை ஈர்த்திருக்கிறது. வாக்களித்தவர்கள் மட்டுமல்ல நம்மை எதிர்த்தவர்கள்கூட இப்போது பாராட்டுகிறார்கள். இது நம்முடைய எதிரிகளை அச்சமடைய வைத்திருக்கிறது.

சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் பேசியிருக்கிறார். பத்திரிகைகளில் படித்துப் பார்த்தேன். அது பேச்சு அல்ல, வயிற்றெரிச்சல். தன்னுடைய வயிற்றெரிச்சலை வார்த்தைகளாகக் கொட்டி இருக்கிறார். தி.மு.க. ஆட்சிக்கு வந்து எந்த ஒரு புதிய திட்டத்தையும் கொண்டுவரவில்லை என்று பேசியிருக்கிறார். இந்த இரண்டரை ஆண்டுகால சாதனைகளைச் சொல்ல ஆரம்பித்தால் அதற்கே இரண்டு மணி நேரமாகும்! அவ்வளவு சாதனைகளை செய்திருக்கிறோம்!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த ‘பச்சைப் பொய்யர்’ பழனிசாமி, சொன்னதிலேயே பெரிய பொய் எது என்றால் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களைதான் ரிப்பன் வெட்டி நாம் தொடங்கி வைக்கிறோமாம். பிளான் போட்டு, கட்டி முடித்து வைத்து விட்டார்களாம். நாம் சென்று ரிப்பன் வெட்டி விட்டு வந்துவிட்டோமாம். யாரு? பொய்ச்சாமி, மன்னிக்கவும் பழனிசாமி பேசுகிறார்.

நான் கேட்கிறேன், மகளிருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோமே? அது நீங்கள் போட்ட திட்டமா?

எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்களை அன்போடு பணிவோடு கேட்கிறேன், விடியல் பயணம் - பெண்களுக்கான இலவசப் பேருந்து பயணத் திட்டம் நீங்கள் போட்ட திட்டமா?

காலைச் சிற்றுண்டித் திட்டம், யார் போட்ட திட்டம்?

புதுமை பெண் திட்டத்தில், மாணவியர்க்கு 1000 ரூபாய் தருகிறோமே, இது பழனிசாமியின் திட்டமா?

இலட்சக்கணக்கான மாணவர்களை முன்னேற்றும் ’நான் முதல்வன் திட்டம்’ அ.தி.மு.க. திட்டமா?

நம்மைக் காக்கும் 48, இல்லம் தேடிக் கல்வி இதெல்லாம் என்ன என்றாவது பச்சைப் பொய்யர் பழனிசாமிக்கு தெரியுமா?

2 லட்சம் உழவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம். இது அ.தி.மு.க. திட்டமா?

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகி வருகிறார்களே? இது பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக இருக்கிறாரே பழனிசாமி அவரின் ஆட்சியில் நடந்ததா?

மாபெரும் தமிழ்க் கனவு - தமிழ் பரப்புரைக் கழகம் நடத்தி வருகிறோமே! இந்த திட்டம் எல்லாம் பழனிசாமியின் கனவிலாவது வந்திருக்குமா?

தந்தை பெரியார் அண்ணல் அம்பேத்கர் - அருட்பிரகாச வள்ளலார் மகாகவி பாரதியார் ஆகியோருக்கான விழாக்களை நம்மை திராவிட மாடல் அரசு நடத்துகிறதே, இவர்களின் கொள்கைகளாவது என்ன என்று கம்பராமாயணம் படித்த பழனிசாமி சொல்வாரா?

வன்னியர் இடஒதுக்கீட்டிற்கு போராடிய இடஒதுக்கீட்டு தியாகிகளுக்கு மணிமண்டபம் அமைத்து வருகிறோமே, இது அ.தி.மு.க. ஆட்சியில் போட்ட திட்டமா?

ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையத்தை பழனிசாமி தன்னுடைய ஆட்சியில் கண்டுகொண்டாரா?

அரசு ஊழியராக இருக்கும் மகளிருக்கு மகப்பேறு விடுப்பை 9 மாதத்தில் இருந்து 12 மாதம் ஆக்கியது நம்முடைய தி.மு.க. ஆட்சி!

ஆட்சிக்கு வந்து 1000 நாட்கள் கூட ஆகவில்லை, ஆயிரம் கோயில்களில் குடமுழுக்கு நடத்தியிருக்கும் ஆட்சிதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி.

**பொய் பொய்யாகச் சொல்லும் பழனிசாமி!**

இது எதுவும் பழனிசாமி கண்ணுக்கு ஏன் தெரியவில்லை? தெரிந்து கொள்ள விரும்பவில்லையா? இல்லை, இன்னும் தரையிலேயேதான் ஊர்ந்துகொண்டு இருக்கிறாரா? தலையைக் கொஞ்சம் தூக்கிப் பாருங்கள் பழனிசாமி அவர்களே! தமிழ்நாடு மாறிக் கொண்டிருக்கிறது!

## தீபம் தெரிவதைப் போல - இந்தியாவிற்கான நம்பிக்கை ஒளி தெரிகிறது!

நான்காண்டுகாலம் ஆட்சி அதிகாரம் இருந்தபோது மக்களுக்காக எதையுமே செய்யாமல், இப்போது பதவி பறிபோன பிறகு, தன்னைப் போலவே எல்லாரும் இருப்பார்கள் என்று நினைக்கிறார் பழனிசாமி. மக்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள் என்று நினைத்துவிட்டார் போல! அதனால்தான் பொய் பொய்யாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்!

**அவரின் ஆட்சியில் தமிழ்நாடு எல்லா துறைகயிலும் முதலிடம் பிடித்ததாம். பழனிசாமி சொல்கிறார். நாம் கேட்பது, சொந்தமாக விதைத்து அறுவடை செய்வதுதான் பெருமை!**

**மூன்று வேளாண் சட்டங்களுக்கு ஆதரவாகவும் போராடிய ஏழை விவசாயிகளுக்கு எதிராகவும் பேசிய - போலி விவசாயி பழனிசாமிக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?**

**உண்மையில், அவரின் ஆட்சியில் தமிழ்நாட்டு நலன்களும் உரிமைகளும் பா.ஜ.க. விடம் அடகு வைத்து காவு கொடுக்கப்பட்டது! இதுதான் வரலாறு!**

**போதைப் பொருளான குட்கா விற்க லஞ்சம் வாங்கியதற்காக ஒரு அமைச்சர் வீட்டிற்கே ரெய்டு வந்ததை மறைக்க முடியுமா?**

**சாத்தான்குளம் ஜெயராஜ் - பெனிக்ஸ் மரணம் இன்னும் ஆறாத வடுவாக இருக்கிறது!**

**தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தில் காக்கை குருவிகளை சுடுவது போல 13 பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, டி.வி. யைப் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னீர்களே பழனிசாமி... உங்கள் முகத்திரைதான் நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணையத்தின் அறிக்கையில் அப்பட்டமாகக் கிழிந்து தொங்கியதே! மறந்துவிட்டீர்களா?**

**எல்லாவற்றுக்கும் மேல், பொல்லாத ஆட்சி அதற்குப் பொள்ளாச்சியே சாட்சி என்று தமிழ்நாடே கொதித்ததே மறந்துவிட்டதா? பொள்ளாச்சி பாலியல் கொடுமை நெஞ்சில் ஈரம் இருக்கும் எல்லோரையும் கதற வைத்தது... ஆனால் பழனிசாமி அதைப்பற்றி கொஞ்சம் கூட கவலைப்படவில்லை... இது தான் பழனிசாமி ஆட்சியின் லட்சணம்.**

இதையெல்லாம் மக்கள் மறந்து இருப்பார்கள் என்று நினைத்து வாய்ச்சவடால் விட்டுக் கொண்டு இருக்கிறார் திருவாளர் பழனிசாமி.

தி.மு.க. குடும்பக் கட்சியாம்! ஆமாம், குடும்பக் கட்சிதான்! அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன், தி.மு.க. குடும்பக் கட்சிதான். கோடிக்கணக்கான தமிழ்க் குடும்பங்களை வாழவைக்கும் கட்சி, தி.மு.க. பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் காட்டிய பாதையில், ஒற்றைக் கையெழுத்தில் கோடிக்கணக்கான குடும்பங்களின் மனதில் மகிழ்ச்சியை உருவாக்கிய கட்சி, தி.மு.க.!

பச்சைப் பொய் பழனிசாமி அவர்களே! சம்பந்திக்கும், சம்பந்தியின் சம்பந்திக்கும் காண்ட்ராக்ட் கொடுத்து, ஹைகோர்ட் - சுப்ரீம் கோர்ட்டு என்று ஓடிக்கொண்டே இருக்கும் உங்களுக்கு, குடும்பக் கட்சி என்று விமர்சிக்க எந்த யோக்கியதையும் இல்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்த அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர் பழனிசாமி. வருகிற நாடாளுமன்றத் தேர்தலிலும் முழுமையாகத் தோற்கடிக்கப்படுவார்! பா.ஜ.க. கூட்டணியில் இருந்தால் டெபாசிட் கூட தேறாது என்று திட்டம் போட்டு, டெபாசிட்டைக் காப்பாற்றிக் கொள்ள தனியாகப் பிரிந்த மாதிரி ’உள்ளே வெளியே’ நாடகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

**கூட்டணி தர்மம் என்று சப்பைக் கட்டு கட்டுவதா?**

சிறுபான்மை இனத்தவர் மீது திடீர் என்று பாசம் பொங்குகிறது. குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்புரிமை ரத்து, முத்தலாக் தடை என்று எல்லா சட்டத்தையும் கண்ணை மூடி ஆதரித்தவர் பழனிசாமி. அதை எதிர்த்த தி.மு.க.வினரைச் சட்டமன்றத்திலேயே எப்படியெல்லாம் பேசினார், பா.ஜ.க.விற்கு எப்படியெல்லாம் பல்லக்கு தூக்கினார் என்று எல்லோருக்கும் நன்றாக தெரியும்! “குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் யார் பாதிக்கப்பட்டார்கள்” என்று கேட்டார் பழனிசாமி. இப்படியெல்லாம் ஆணவத்தோடு பேசிவிட்டு, இப்போது, ‘கூட்டணி தர்மம்’ என்று சப்பைக்கட்டு கட்டி தன்னுடைய நாடகத்திற்கு ஸ்கிரிப்ட் எழுதிக் கொண்டு இருக்கிறார்.

ஆனால் மக்கள் இப்போதும் என்ன கேட்கிறார்கள், “மக்களை காவு கொடுத்துவிட்டு எதற்காக கூட்டணி வைத்தார்?” பா.ஜ.க.வை விமர்சிக்காமலேயே பா.ஜ.க.விற்கு எதிராக கூட்டணி அமைக்கிறேன் என்று அவர் போடும் நாடகம், மிகப்பெரிய நரித்தனத்தின் அடையாளம்! இவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் ஆட்டுவிக்கப்படுகிறார். தேர்தல் நெருங்க நெருங்க அதுவும் அம்பலம் ஆகிவிடும்.

**எத்தனையோ போர்க்களங்களை பார்த்த திருவண்ணாமலை வட்டாரம்!**

தேர்தல் என்ற போர்க்களம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. ஈராயிரம் ஆண்டுகளாக தமிழ்நிலத்தில் அதிகமான போர்கள் நடந்த மாவட்டம் திருவண்ணாமலை மாவட்டம்!

முதலாம் தெள்ளாற்றுப் போர் - இரண்டாம் தெள்ளாற்றுப் போர் - திருவண்ணாமலைப் போர் - வந்தவாசிப் போர் - தேசூர்ப் போர் - ஆரணிப் போர் - செங்கம் கணவாய்ப்போர் - சேத்துப்பட்டில் போர் என்று வரிசையாக எத்தனையோ போர்க்களங்களைப் பார்த்த ஊர், இந்தத் திருவண்ணாமலை வட்டாரம்!

இப்போது நாம் இந்திய ஜனநாயகத்தைக் காக்கும் போர்க்களத்தில் நிற்கிறோம். இந்த தேர்தல் களத்தில் நாம் காணப் போகும் வெற்றிதான் எதிர்கால இந்தியாவிற்கு மிக மிக முக்கியம்!

100 ஆண்டு காலமாக சமூகநீதியின் மூலமாக தமிழ்நாடு பல்வேறு முன்னேற்றங்களை அடையத் தொடங்கியது. கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எத்தனையோ முன்னெடுப்புகளை செய்திருக்கிறது. தொடர்ந்து இப்போது இந்தியாவே தலைநிமிர்ந்து பார்க்கும் ஆட்சியை நடத்தி வருகிறோம். இந்த திராவிட மாடல் கோட்பாடானது - இந்தியா முழுமைக்கும் செயல்படுத்தப்படுமானால் உலகில் தலைசிறந்த நாடாக இந்தியா உயரும்!

மக்களைப் பிளவுபடுத்தி அடிமைப்படுத்தும் பாசிச பா.ஜ.க.விற்கு முற்றுப்புள்ளி வைக்கும் தேர்தல் களத்திற்கு இந்தத் திருவண்ணாமலை பாசறைக் கூட்டமானது நல்ல வழிகாட்டியாக அமையட்டும்.

நிறைவாக, தீபம் தெரிவதைப் போல இந்தியாவிற்கான நம்பிக்கை ஒளி தெரிகிறது. இந்தியா வாழ்க! இந்தியா கூட்டணி வெல்க! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில் மாநில அளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 'ஏழைப் பங்காளர் கலைஞர்' என்னும் மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையேற்று பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சிவ.வீ.மெய்யநாதன், சி.வி.கணேசன், மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், நில நிர்வாக சீர்திருத்த ஆணையர் வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

### மாவட்டச் செயலாளர்கள் தங்க தமிழ்ச்செல்வன் - கம்பம் நா.ராமகிருஷ்ணன் தலைமை!

# தேனி மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி – அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

தேனி, அக். 22 -

தேனி வடக்கு தெற்கு மாவட்ட சார்பில் தேனியில் என்.ஆர்.டி. மண்டபத்தில் கழக செயற்குழு கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன், தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த செயற்குழு கூட்டத்திற்கு சரவணகுமார் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட அவை தலைவர் பி.டி.செல்லப்பாண்டியன், தெற்கு மாவட்ட அவைத் தலைவர் மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர், கழக துணை பொதுச் செயலாளர் ஐ. பெரியசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

உயர்நிலை திட்டக்குழு உறுப்பினர் மூக்கையா, தேர்தல் பணிக்குழு செயலாளர் செல்வேந்திரன், மாநில தீர்மானக் குழு இணைசெயலாளர் ஜெயக்குமார், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன், மாநில நெசவாளர் துணை செயலாளர் ராமசாமி, மாநில மீனவரணி வாரிய உறுப்பினர் முருகன், போடி மேற்கு ஒன்றிய செயலாளர் லட்சுமணன், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், தேனி தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தின சபாபதி, தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, சின்னமனூர் மேற்கு ஒன்றியசெயலாளர் முருகேசன், போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன், ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், கடமலை மயிலை தெற்கு ஒன்றிய, செயலாளர் சுப்பிரமணி, உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், உத்தமபாளையம் மேற்கு ஒன்றிய செயலாளர் குமரன், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, கடமலை மயிலை வடக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி, கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன், பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ், போடி நகரச் செயலாளர் புருஷோத்தமன், கூடலூர் நகர செயலாளர் லோகன் துறை, சின்னமனூர் நகர செயலாளர் முத்துக்குமார், கம்பம் வடக்கு நகர செயலாளர் வீரபாண்டியன், கம்பம் தெற்கு நகர செயலாளர் சூர்யா செல்வகுமார்,

தேனி நகர மன்ற தலைவர் ரேணு பிரியா பாலமுருகன், பெரியகுளம் நகர மன்ற தலைவர் சுஷ்மிதா செல்வகுமார், போடி நகர மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர் , வடக்கு மாவட்ட துணைச் செயலாளர்கள் செந்தில் முருகன் திருக்கண்ணன்.

மாவட்ட பொருளாளர் சுரேஷ், தெற்கு மாவட்ட துணை செயலாளர்கள் குரு, இளங்கோ, திருமலைசாமி, தெற்கு மாவட்ட பொருளாளர் பால்பாண்டி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆசையன், சங்கர், முருகேசன், தெய்வேந்திரன், ரமேஷ், கண்ணையன், முனியம்மாள், சேரன், 'சேகர், சுதா.

பேரூர் கழகச் செயலாளர்கள் கெங்குவார்பட்டி தமிழன், தேவதானப்பட்டி திலகர் ராஜா, வடுகபட்டி காசிவிஸ்வநாதன், குச்சனூர் திலிப் குமார் மார்க்கையன்கோட்டை முருகன் பிசி பட்டி செல்வராஜ், பூதிபுரம் கவியரசு ஆண்டிபட்டி சரவணன், புதுப்பட்டி ராஜ்குமார், பாளையம் முகமது அப்துல் காசிம், தேவாரம் மரிய அஞ்சலி தாஸ், மேல சொக்கநாதபுரம் செல்வம் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், வடக்கு மாவட்ட மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான், தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரகாஷ்,

வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ஸ்டீபன், வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பவானி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ரமா பிரியா, சாரதா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் ராஜசேகர் வசந்தன், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர்கள் ராஜேஷ் குமார், அதிபன் ராஜ், மருத்துவர் அணி அமைப்பாளர்கள் டாக்டர் பாண்டியராஜன், டாக்டர் சேகர், இலக்கிய அணி அமைப்பாளர்கள் நம்பிக்கை நாகராஜ், அலாவுதீன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் அமைப்பாளர்கள் வழக்கறிஞர் செல்வகுமார், முருகன், பொறியாளர் அணி அமைப்பாளர்கள் முத்துக்குமார், விஜய் பிரவீன், விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ், வர்த்தக அணி அமைப்பாளர் பால்பாண்டி, நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேனி நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் நன்றியுரை ஆற்றினார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், லீபுரம் ஊராட்சியில் வாக்குச் சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி நூர்ஜகான் பேகம்

### அக்டோபர் 24 (2018)



கழகத்தின் கொள்கை முழக்கக் குரலாக - தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்பரணி பாடும் பெண் சிங்கமாகத் திகழ்ந்த இவர், திருச்சி மாவட்டம் கரூரில் பிறந்து, 1972ல் கழகத்தின் தொண்டராக இணைந்து, தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, கழகத்தின் லட்சியங்களையும் செயல் திட்டங்களையும் பிரச்சாரம் செய்து வந்தவர்.

திண்டுக்கல் நகர 10வது வட்டக் கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, மாவட்டம் முதல் மாநிலம் வரை மகளிர் அணியில் தலைவர், செயலாளர், புரவலர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திண்டுக்கல்லில் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு மக்கள் பணியினைச் சீரிய முறையில் ஆற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று, சிறைச் சாலைகளுக்குச் சென்றவர். தலைவர் கலைஞர் அவர்கள், மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு "நீதிகேட்டு நெடும் பயணம்" சென்றபோது, எட்டு நாட்களும் தொடர்ந்து தலைவர் அவர்களுடன் நடந்து சென்றவர். தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் "கலைஞர் விருதினை" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



# தி.மு.க.

# இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்

### பொறுப்புகளுக்கான நேர்காணல்

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம்–6, மண்டலம்–8 மற்றும் மண்டலம்–9–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது. விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | திருச்சி மத்திய | 25.10.2023 | காலை 9.00 மணி | கலைஞர் அறிவாலயம், திருச்சி |
| 2 | திருச்சி வடக்கு | 25.10.2023 | மதியம் 12.00 மணி | |
| 3 | திருச்சி தெற்கு | 25.10.2023 | மதியம் 3.00 மணி | |
| 4 | திண்டுக்கல் கிழக்கு | 26.10.2023 | காலை 9.00 மணி | சித்தாரா மஹால், நத்தம் சாலை, திண்டுக்கல். |
| 5 | திண்டுக்கல் மேற்கு | 26.10.2023 | மதியம் 2.00 மணி | |
| 6 | தேனி வடக்கு | 27.10.2023 | காலை 10.00 மணி | கிரீன் ராயல் ரிசார்ட், மூனாறு மெயின்ரோடு, போடிநாயக்கனூர். |
| 7 | தேனி தெற்கு | 27.10.2023 | மதியம் 12.00 மணி | |
| 8 | மதுரை மாநகர் | 31.10.2023 | காலை 9.00 மணி | ஆளாத்தூர் பி.ஆர். மஹால், மதுரை. |
| 9 | மதுரை வடக்கு | 31.10.2023 | மதியம் 12.00 மணி | |
| 10 | மதுரை தெற்கு | 31.10.2023 | மதியம் 3.00 மணி | |
| 11 | சிவகங்கை | 01.11.2023 | காலை 9.00 மணி | இராஜேஷ்வரி மஹால் பர்மா காலனி, காரைக்குடி. |
| 12 | ராமநாதபுரம் | 01.11.2023 | மதியம் 2.00 மணி | பீமாஸ் வைஸ்ராய் மஹால், பாரதி நகர். இராமநாதபுரம். |
| 13 | விருதுநகர் தெற்கு | 02.11.2023 | காலை 9.00 மணி | சரஸ்வதி கிராண்ட் (கந்தசாமி இராஜம்மாள்) திருமண மண்டபம். அருப்புக்கோட்டை ரோடு, விருதுநகர். |
| 14 | விருதுநகர் வடக்கு | 02.11.2023 | மதியம் 12.00 மணி | |
| 15 | தூத்துக்குடி வடக்கு | 03.11.2023 | காலை 9.00 மணி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி. |
| 16 | தூத்துக்குடி தெற்கு | 03.11.2023 | மதியம் 2.00 மணி | சத்யா மஹால், புதுக்கோட்டை, துத்துக்குடி. |
| 17 | தென்காசி தெற்கு | 04.11.2023 | காலை 9.00 மணி | சேனைத்தலைவர் மாளிகை, ஐந்தருவி சாலை, குற்றாலம். |
| 18 | தென்காசி வடக்கு | 04.11.2023 | காலை 11.00 மணி | |
| 19 | திருநெல்வேலி மத்திய | 04.11.2023 | மதியம் 2.00 மணி | வீரபாண்டியன் மஹால் (கோபாலசாமி கோவில் அருகில்) பாளையங்கோட்டை. |
| 20 | திருநெல்வேலி கிழக்கு | 04.11.2023 | மாலை 4.00 மணி | ஹோட்டல் அப்பனா பார்க், 5, பைபாஸ் ரோடு, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி |
| 21 | கன்னியாகுமரி கிழக்கு | 05.11.2023 | காலை 9.00 மணி | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினச்சேரி, நாகர்கோவில். |
| 22 | கன்னியாகுமரி மேற்கு | 05.11.2023 | மதியம் 12.00 மணி | வசந்த மாளிகை ஆடிட்டோரியம், சாமியார் மடம் கன்னியாகுமரி. |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 22–10–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

### கல்வியை வணிக – மதவெறி மயமாக்குகிறது மோடி அரசு!

# 'நீட்' என்பது மாணவர் சமுதாயத்தின் மீதான கொடிய தாக்குதல்!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 24 -

கல்வியை வணிக மத வெறி மயமாக்குகிறது மோடி அரசு என்றும் 'நீட்' என்பது மாணவர் சமுதாயத்தின் மீதான கொடிய தாக்குதல் என்றும் 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.



தீக்கதிர்
2023 அக்டோபர் 23 திங்கட்கிழமை
நீட் : ஒரு பெரும் வணிகம்

23.10.2023 தேதிய 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள தாவது:-

தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஞாயிறன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "ஏதாவது ஒரு குழந்தை நீட் தேர்வுக்கு எதிராக இருக்கிறதா? யாருமே நீட் தேர்வுக்கு எதிராக இல்லை" என கூறியுள்ளார்.

மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு நீட் நுழைவுத் தேர்வை ஒன்றிய அரசு கட்டாய மாக்கியது. அதனால்தான் மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்கள் 12 ஆம் வகுப்பு முடித்த கையுடன் நீட் நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்களில் பயின்று தேர்வுகளை எழுதி வருகிறார்கள்.

நீட் தேர்வில் வெற்றி பெறுவதற்காக வசதி படைத்த மாணவர்கள் தனியார் நடத்தும் பயிற்சி மையத்திற்கு செல்கிறார்கள். ஒவ்வொரு மாணவரும் குறைந்த பட்சம் ரூ.2 லட்சம் செலுத்த வேண்டியுள்ளது. ஏழைகள் எட்டிப் பார்க்க முடியவில்லை. பயிற்சி மையங்கள் குறைந்தது ரூ.12 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டுகின்றன.

நீட் தேர்வால் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் தற் கொலை செய்துகொண்டுள்ளனர். இராஜஸ்தானில் நீட் தேர்வால் தற்கொலை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை (2023)ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை 23ஆக உள்ளது. இது கடந்த எட்டாண்டுகளை விட மிக அதிகம்.

நீட் தேர்வால் 2015 ஆம் ஆண்டில் 17 பேர், 2016ல் 16, 2017ல் 7 பேர், 2018ல் 20 பேர் 2019ல் 8 பேர், 2020ல் நான்கு பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2021ல் கொரோனா தொற்று பரவலால் நிறுவனங்கள் மூடப்பட்டன. 2022ஆம் ஆண்டில் 15 பேர் தற்கொலை செய்து கொண் டுள்ளனர்.

நீட்தேர்வால் தற்கொலை நடக்கிறது என்பதை மறைத்துவிட்டு நீட் தேர்வை தமிழகம் ஏற்றுக்கொண்டுவிட்டது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சித்துள்ளார் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை. ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒட்டுமொத்த கல்வித் துறையையும் பெரும் வணிகமாக மாற்றத் துடிக்கிறது. கல்வி என்பது முத லாளித்துவ உலகில் டிரில்லியன் டாலர் வணிகமாக மாற்றப்பட்டு வருகிறது. அதை இன்னும் வேகப்படுத்தும் விதமாக, கல்வியை முழுமையான வணிகமயமாக்குவது; மதவெறி மயமாக்குவது; மாநிலங்களின் அதிகாரங்களைப் பறித்து கல்வியை முற்றிலும் ஒன்றிய அரசின் அதிகார வரம்புக்குள் கொண்டுவருவது ஆகிய மூன்று செயல்திட்டங்களுடன் மோடி அரசு புதிய தேசிய கல்விக் கொள்கையை கொண்டு வந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாகத்தான் நீட் உள்பட பலவிதமான நுழைவுத் தேர்வுகளை மிகக் கடுமையான முறையில், விடாப்பிடியாக திணித்து, அமலாக்கியுள்ளது. இது கல்வியில் ஜனநாயகத்தை அழித்து, எதேச்சதிகாரத்தின் கொடிய பிடிக்குள் கல்வியை சிக்க வைத்திருக்கும் வியூக மாகும். எனவே நீட் என்பது மாணவர் சமுதாயத்தின் மீதான கொடிய தாக்குதலே!

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.





கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாடு, கழக இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறித்து மதுரை கிழக்கு தொகுதி திருமோகூரில் நடைபெற்ற இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் பெருநாழி போஸ், கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி, மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், கிழக்கு ஒன்றிய துணை சேர்மன் பாலாண்டி, மாணவர் அணி அமைப்பாளர் ஆதிசங்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள் அண்ணாமலை, ஆனந்த், இளைஞர் அணி நிர்வாகிகள் வன்னிமுத்துப்பாண்டி, வெற்றிச்செல்வன், மருதுராஜா, இளங்கோவன், சரவணன், போஸ், நிஷாந்த் மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்ளனர்.

## தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு! வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக். 24 -

வடகிழக்கு பருவ மழை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதி களில் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி நகர்ந்து மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதி களில் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

தென்மேற்கு அரபிக்கடலில் மையம் கொண்டிருந்த ‘தேஜ்’ புயலானது அதி தீவிர புயலாக வலுப்பெற்றது. இந்த புயல் அடுத்த 2 நாட்களில் ஏமன் மற்றும் ஓமன் கடலோரப் பகுதிகளுக்கு நகரக் கூடும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ் நாட்டில் 8 மாவட்டங் களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை நேற்று காலை வரை இயல்பை விட 31 சத விகிதம் குறைவாக பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### தஞ்சாவூர் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி, மாணவரணி மற்றும் மருத்துவரணி சார்பில்

## “நீட் விலக்கு நம் இலக்கு” 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கம்!

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - செ.இராமலிங்கம் எம்.பி.- சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. - மருத்துவர் யாழினி பங்கேற்பு!

தஞ்சாவூர், அக். 24 -

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாடு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில் இந்திய குடியரசுத் தலைவருக்கு 50 இலட்சம் கடிதம் அனுப்பும் வகையில் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டது.

மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமையில் நடைபெற்ற கையெழுத்து இயக்க தொடக்க நிகழ்ச்சியில் தஞ்சாவூர் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா வரவேற்புரையாற்றினார். மருத்துவரணி அமைப்பாளர் பிரபு சீனிவாசன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேசன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வெங்கடேசன், ஸ்டாலின், சிலம்பரசன், மணிகண்டன், விஜய் பிரசாத் மற்றும் மாணவரணி துணை அமைப்பாளர்கள் தேவராஜன், ராஜேஷ், இலக்கியா பட்டாபிராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, செ.இராமலிங்கம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், ஆகியோர் குடியரசுத் தலைவருக்கு நீட் தேர்வு எதிர்ப்பு குறித்து அனுப்பும் அஞ்சல் அட்டையில் கையெழுத்திட்டு விழாவை துவக்கி வைத்தனர். விழாவில் சிறப்பு அழைப்பாளராக மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் யாழினி பங்கேற்று, மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் நீட் தேர்வு குறித்தும், அதன் பின்னால் உள்ள அரசியல் குறித்தும் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்த நிகழ்ச்சியை காணொளி காட்சி மூலம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, கோவி.அய்யாராசு, நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணா மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் கோ.தாமரைச்செல்வன், தியாக.சுரேஷ்குமார், பி.எஸ்.குமார், சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துசெல்வம், க.நாசர், ஜெ.சுதாகர், உதயசந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில் குமார் நன்றி கூறினார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில்

## மதுரையில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி!

### கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமை! அமைச்சர் எஸ்.ரகுபதி பரிசுகளை வழங்கினார்!

மதுரை, அக்.24-

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மதுரையில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் மதுரை சட்டக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன்; துணைச் செயலாளர் பச்சையப்பன்; தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சரவணன், பா.கனேசன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவநேசன் தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிகொண்டான், நன்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற காரைக்குடி அரசு சட்டக் கல்லூரி மாணவி வர்ஷாவுக்கு ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்;

இரண்டாம் பரிசு பெற்ற தேனி அரசு சட்டக் கல்லூரி மாணவி சரண்யாவுக்கு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்;

மூன்றாம் பரிசு பெற்ற தேனி தப்புக்குண்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர் அருண் குமாருக்கு ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்;

ஆறுதல் பரிசு பெற்ற தேனி அரசு சட்டக் கல்லூரி மாணவர் முஹம்மது அஸ்மதுக்கு, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவி மீனாம்பிகா அவர்களுக்கு தலா ரூபாய் 5,000/ வெண்கலப் பதக்கம், சான்றிதழும் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பாராட்டு சான்றிதழ்களையும் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.

இப்பேச்சு போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற சட்டக் கல்லூரி மாணவர்கள் டிசம்பர் 6 அன்று சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

## லீபுரம் ஊராட்சியில் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் சிறப்புரை!

கன்னியாகுமரி, அக். 24-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட லீபுரம் ஊராட்சியில் உள்ள 6 வாக்குச் சாவடிகளில் 100 வாக்காளர்களுக்கு 1 முகவர் என்று நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் 22.10.2023, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு லீபுரம், ஆமணக்கண்விளை, குமாரதங்கம் ஆசிரியர் அவர்களின் இல்ல வளாகத்தில் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் தலைமையில், மாவட்ட விவசாய அணி தலைவர் முத்துசாமி முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்துகொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களின் (BLC) வருகை பதிவேடு தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டது. கூட்டத்தில் மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என். தாமரைபாரதி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2), வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (BLC) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

பல இன்னல்களை நமக்கு தந்து கொண்டிருக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்தும் விதமாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் இன்றே அயராது பாடுபட வேண்டும் எனவும் மேலும் களப்பணியை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

28.10.2023, சனிக்கிழமை அன்று குமரிக்கு வருகை தரும் மாநில இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கவும், அதன்பிறகு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஒன்றியத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டில் நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம் மதுரை வடக்கு மாவட்டம் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பாக நடைபெற்றதில் முன்னாள் எம்.பி.யும் கழக கொள்கை பரப்புச் செயலாளருமான கம்பம் செல்வேந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார். உடன் அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், பொருளாளர் சோமசுந்தரபாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் நேரு பாண்டியன், மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### பெரு முதலாளிகளுக்கு மோடி அரசு தள்ளுபடி செய்த

## வாராக்கடன் ரூ.14 லட்சம் கோடியா? ரூ.25 லட்சம் கோடியா?

### ஒன்றிய இணை அமைச்சர் அளித்த பதில் உண்மையா? ரிசர்வ் வங்கி அளித்த பதில் உண்மையா?

**பெரு முதலாளிகளுக்கு மோடி அரசு தள்ளுபடி செய்தது ரூ.14 லட்சம் கோடி இல்லை. மோடி அரசு பெரு முதலாளிகளுக்கு தள்ளுபடி செய்தது ரூ.25 லட்சம் கோடி என ஆர்.டி.ஐ. எனப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் ஒரு அதிர்ச்சி தகவல் வீடியோ பதிவு மூலம் சமூக வலை தளங்களில் பரவி வருகிறது.**

அந்த வீடியோ பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஆர்.டி.ஐ. என்று அழைக்கக்கூடிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

வங்கிகள் பெருமுதலாளிகளுக்கு வாராக்கடன் அளித்தது ரூ.14 லட்சம் கோடியா அல்லது ரூ.25 லட்சம் கோடியா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

**கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் கேள்வி!**

கடந்த மழைக்கால கூட்டத் தொடரில் தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள், வங்கிகளின் வாராக் கடன் தொடர்பான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நிதி துறை இணை அமைச்சர் பகவத் காரத் 2014ஆம் ஆண்டிலிருந்து 2022 - 2023ஆம் நிதி யாண்டு வரை 14,56,226 கோடி ரூபாய் வாராக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.




இந்த தகவலை ஒப்பிட்டு ஆர்.டி.ஐ. மூலமாக, உண்மையில் கடந்த 9 ஆண்டுகளில் வாராக்கடன் தள்ளுபடி எவ்வளவு என்று ரிசர்வ் வங்கிக்கு குஜராத்தைச் சேர்ந்த சஞ்சய் என்பவர் மனு அளித்திருந்தார்.

அந்த மனுவுக்கு அளித்த பதிலில், கடந்த 9 ஆண்டுகளில் 25 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வாராக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்திருக்கிறது.

**நாடாளுமன்ற மக்களவையில், கேள்வி எண். 2983 என்ற தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நிதித்துறை இணை அமைச்சர் பகவத் காரத் அளித்த பதில் உண்மையா? ரிசர்வ் வங்கி அளித்த பதில் உண்மையா? என்ற அதிர்ச்சி சந்தேகம் நாடு முழுவதும் எழுந்திருக்கிறது.**


இரண்டு தகவல்களுக்குமிடையே இருப்பது ரூ.1கோடி, ரூ.2 கோடி, ரூ.100 கோடி, ரூ.200 கோடியல்ல; 10 லட்சம் கோடி ரூபாய் வித்தியாசம் இருக்கிறது.

பெரு முதலாளிகளுக்கு வாராக் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை அரசாங்கத்தின் இரண்டு அமைப்புகள் அளிப்பதிலே இவ்வளவு முரண்பாடுகள் ஏன் என்ற கேள்விதான் இப்பொழுது அனைவருக்கும் எழுந்துள்ள ஒரு கேள்வி.

சிறு - குறு - நடுத்தர தொழிலதிபர்கள் வங்கிகளில் கடன் கேட்டால் அவர்களது சொத்துக்களை பிணையப் பத்திரமாக வைத்து, ஆயிரத்தெட்டு கையெழுத்துகளை கேட்டு, கடன்களுக்காக அலைகழிக்கப்படுவதும், அவர்கள் கடன் தொகைகளை செலுத்தவில்லை என்றால் அவர்களது சொத்துகளை ஜப்தி செய்வதும் தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது.

சாதாரண விவசாயிகள் டிராக்டர் கடனுக்காக விண்ணப்பித்தால் அவர்களது இல்லங்களுக்கே சென்று அவர்களை அவமானப்படுத்தும் கதையும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெரு முதலாளிகளுக்கு ரூ.25 லட்சம் கோடி வாராக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது அனைத்து மக்களிடமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அந்த வீடியோ பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளருமான ந. பாண்டுரங்கன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் பா.மதிமொழி, மருமகன் வ.பரந்தாமன் (எ) சங்கர் ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலை, கலைஞர் திடலில் நடைபெற்ற திருவண்ணாமலை நகர கழகச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மற்றும் நகர மன்றத் தலைவர் திருமதி நிர்மலா வேல்மாறன் தம்பதியரின் மகள் வே.காமினி – எஸ்.ரகுநாத் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில்

# தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுக்கு வெள்ளிப் பதக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, அக். 24-

பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார். ‘தமிழ்நாட்டுக்கும் இந்தியாவிற்கும் மீண்டும் ஒரு முறை பெருமை பாராட்டுகள்’ என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



சீனாவில் உள்ள ஹாங்சோ நகரில் நேற்று முன்தினம் முதல் பாரா ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது. இம்மாதம் 28ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவில் இருந்து 303 பேர் (191 வீரர்கள் 112 வீராங்கனைகள்) கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

பாரா உயரம் தாண்டும் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த மூவர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். இவர் ஏற்கனவே 2016ஆம் ஆண்டு இரியோ - டி - ஜெனீராவில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்று தங்கப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழாண்டுகளுக்குப் பிறகு தற்போது நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**பாரா ஆசிய விளையாட்டில் உயரம் தாண்டுதல் T63 பிரிவில் வெள்ளி வென்று தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் மீண்டுமொரு முறை பெருமை தேடித்தந்துள்ள நமது மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்!**

**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மணவிழா வரவேற்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு!

# சென்னையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இல்ல திருமண விழா!

## நாளை நடைபெறுகிறது!

காட்டுமன்னார்கோவில், அக். 24-

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இல்ல திருமண விழா நாளை சென்னையில் நடைபெறுகிறது. இன்று நடைபெறும் வரவேற்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார்கள். அமைச்சர்கள், தி.மு.க. நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் அருகே முட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - செந்தமிழ்ச் செல்வி தம்பதியினரின் மகள் டாக்டர் கண்மணிக்கும், சென்னை கீழ்ப்பாக்கத்தைச் சேர்ந்த நீதியரசர் திலகவதி - கார்த்திக் தம்பதியினரின் மகன் டாக்டர் சித்தார்த் ஆகியோருக்கும் திருமணம் திருவான்மியூர் ஸ்ரீராமச்சந்திர கன்வென்ஷன் சென்டரில் நாளை (25ம் தேதி) காலை 9 மணிக்கு நடைபெறுகிறது.

இன்று மாலை 6 மணியளவில் நடக்கும் திருமண வரவேற்பு விழாவில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

திருமண நிகழ்ச்சியில் அமைச்சர்கள், எம்எல்.ஏ.க்கள், தி.மு.க. தலைமை நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

முன்னதாக கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளரும் எம்.ஆர்.கே.கல்வி குழுமங்களின் தலைவருமான எம்.ஆர்.கே.பி.கதிரவன் அனைவரையும் வரவேற்கிறார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, இலண்டன், கிங்ஸ் பல்கலைக்கழகத்தில் 27.10.2023 அன்று நடைபெறவுள்ள பெரியார் – அம்பேத்கர் வாசகர் வட்டத்தில் சொற்பொழிவு ஆற்ற செல்லவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.





வரவேற்பு: 24.10.2023 செவ்வாய்க்கிழமை,
மாலை 6.00 மணி
மண நாள்: 25.10.2023 புதன்கிழமை,
காலை 9.00 - 10.30 மணி
இடம்: ஸ்ரீ ராமச்சந்திரா
கன்வென்ஷன் சென்டர்
திருவான்மியூர், சென்னை - 41
M.R.K இல்லத் திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர்
திரு M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,
அவர்களின் இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமணவிழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர்
அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
தலைமை கழக நிர்வாகிகளையும்,
மாவட்ட கழக செயலாளர்களையும்,
முன்னாள் ஒன்றிய, மாநில அமைச்சர்களையும்,
கழக சார்பு அணி நிர்வாகிகளையும்,
தோழமைக் கட்சி தலைவர்களையும், இன்னாள், முன்னாள்
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும்,
உள்ளாட்சி பிரதிநிதிகளையும்
கழக முன்னோடிகளையும், மற்றும்
ஆன்றோர்கள் - சான்றோர்கள், நண்பர்கள்
அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கின்றோம்...
தங்க.ஆனந்தன்
ஒன்றிய கழக செயலாளர், திருமுட்டம் கிழக்கு
கடலூர் கிழக்கு மாவட்டம்


பெருந்தலைவர்
M.R.K இல்ல திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
திருமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,MLA., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
திருமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர,
பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
த.சங்கர்
ஒன்றிய கழக செயலாளர்
ஒன்றிய குழு உறுப்பினர்
க.பழனி
பேரூராட்சி மன்ற தலைவர்
பேரூர் கழக செயலாளர்
அண்ணாமலை நகர்
குமராட்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க
கடலூர் கிழக்கு மாவட்டம்


பெருந்தலைவர்
M.R.K இல்லத் திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
திருமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,MLA., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D.,- Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞநலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
திருமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணி நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
M.R.K.P.கதிரவன்
மாவட்ட கழக பொருளாளர், கடலூர் கிழக்கு
V.R.ராஜேந்திரகுமார்
மத்திய ஒன்றிய கழக செயலாளர்
தி.ப.ம.சோழன்
தெற்கு ஒன்றிய கழக செயலாளர்
வே.கோவிந்தசாமி
வடக்கு ஒன்றிய கழக செயலாளர்
N.K.நடராஜன்
மேற்கு ஒன்றிய கழக செயலாளர்
J.M.அன்வர் சதாத்
லால்பேட்டை பேரூர் கழக செயலாளர்
பேரூராட்சி மன்ற து.தலைவர்
குமராட்சி ஒன்றியம் - கடலூர் கிழக்கு மாவட்டம்


M.R.K இல்ல திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
மாண்புமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,MLA., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
ஏ.எஸ்.மதியழகன்
ஒன்றிய கழக செயலாளர் புவனகிரி (மே)
K.R.ராயர்
ஒன்றிய கழக செயலாளர் கம்மாபுரம் (தெ)
டாக்டர் எம்.மனோகர்
ஒன்றிய கழக செயலாளர் புவனகிரி (கி)
புவனகிரி சட்டமன்ற தொகுதி தி.மு.க - கடலூர் கிழக்கு மாவட்டம்
95 000 515 37 சிதம்பரம்


M.R.K இல்ல திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
திருமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,MLA., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
திருமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
இரா.கலையரசன்
ஒன்றிய கழக செயலாளர்
பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க - கடலூர் கிழக்கு மாவட்டம்
95 000 515 37 சிதம்பரம்


M.R.K. இல்லத்திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்
கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி,M.D.,
Dr.K.சித்தார்த்,M.D.,
வரவேற்பு: 24.10.2023
செவ்வாய்க்கிழமை
மணநாள்: 25.10.2023
புதன்கிழமை காலை 9.00 -10.00 மணி
இடம்: ஸ்ரீ ராமச்சந்திரா
கன்வென்ஷன் சென்டர்
திருவான்மியூர், சென்னை
மணமக்களை வாழ்த்த வருகை தரும்
கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் | தலைமை கழக நிர்வாகிகள்
மாவட்ட செயலாளர்கள் | கழக முன்னோடிகள் | தோழமைக் கட்சி தலைவர்கள் இந்நாள், முன்னாள்
நாடாளுமன்ற | சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆன்றோர் - சான்றோர்கள் | நண்பர்கள்
அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்
K.S.ராஜா
கடலூர் மாநகர கழக செயலாளர்
சுந்தரிராஜா B.A.,
கடலூர் மாநகராட்சி மேயர்
கடலூர் மாநகர தி.மு.க | கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க

# ‘நீட்’ விலக்கை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம்!



அரியலூர் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் “நீட் விலக்கு நம் இலக்கு” நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கம் சார்பில், செந்துறை ஒன்றியம், குழுமூர் கிராமத்தில், மருத்துவர் அனிதா திடலில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு, கையெழுத்து இட்டு துவங்கி வைத்து, நீட் எதிர்ப்பு போராளி தங்கை அனிதா அவர்களின் நினைவு நூலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் சஞ்சய் மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்கழக செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவரணி மற்றும் மருத்துவரணி சார்பில், ‘நீட் விலக்கு நம் இலக்கு’ 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., செ.இராமலிங்கம் எம்.பி., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. மருத்துவர் யாழினி, சுப.தமிழழகன், ராஜா, பிரபு சீனிவாசன், வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற நம்முடைய கல்வி உரிமைக்கான கோரிக்கையை நிறைவேற்ற ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க கையெழுத்து இயக்கத்தை கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி மூலம் துவக்கி வைத்தார். இதையடுத்து வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் தலைமைக் கழக செய்தி தொடர்பு குழு துணை செயலாளர் சையத் ஹபீஸ் சித்திக், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் ஆ.பிரபு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் முனைவர் வரத.ராஜசேகர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் ‘நீட் விலக்கு, நம் இலக்கு’ என்ற மக்கள் இயக்கத்தை கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் முன்னிலையில் தொடங்கி வைத்ததையடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் மாணவ, மாணவிகளிடம் மாவட்டக் கழகச் செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார்.

# ஆசிரியர் பணி நியமனத்துக்கான வயது வரம்பு உயர்வு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக். 24-

அனைத்து வகை ஆசிரியர்கள் பணி நியமனம் செய்வதற்கான உச்ச வரம்பு நிர்ணயம் செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர் குமரகுருபரன் வெளியிட்டுள்ள அரசாணை வருமாறு : -

பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிட நேரடி நியமனத்துக்கான உச்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 40 என்றும், இதர பிரிவினருக்கு 45 வயது என்றும் நிர்ணயம் செய்யப்பட்டது. பிறகு இதில் திருத்தம் செய்யப்பட்டு 1.1.2023 முதல் பொதுப் பிரிவினருக்கு 42, இதர பிரிவினருக்கு 47 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நிலையில், கடந்த 4ம் தேதி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வெளியிட்ட அறிவிப்பில், ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று ஆசிரியர் பணிக்காக காத்திருப்போருக்கு உச்ச வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 53, இதரப் பிரிவினருக்கு 58 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பை அடுத்து பள்ளிக் கல்வி இயக்குநர் தமிழ்நாடு அரசுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்ட அறிவிப்பின்படி உச்ச வயது வரம்பு நிர்ணயித்து உரிய அரசாணை வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசிடம் கேட்டுக் கொண்டார்.

இதன்படி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பை செயல்படுத்தும் விதமாகவும், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, பள்ளிக் கல்வித்துறையின் கீழுள்ள ஆசிரியர்களின் நேரடி நியமனத்துக்கான உச்ச வயது வரம்பை பொதுப் பிரிவினருக்கு 53 என்றும், இதர பிரிவினருக்கு 58 என்றும் நிர்ணயித்து தமிழ்நாடு அரசு ஆணை வெளியிடுகிறது.

இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடு முழுவதும் 765 மாவட்டங்களில்

# மோடி அரசை விளம்பரப்படுத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிப்பதா?

## காங்கிரஸ் தலைவர் கார்கே கடும் கண்டனம்!

புதுடெல்லி, அக். 24-

அடுத்தாண்டு மக்களவை தேர்தல் நடைபெற உள்ளதால் மோடி அரசின் சாதனைகளை விளக்கும் வகையில், மாவட்டந்தோறும் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று ஒன்றிய நிதி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அரசின் உத்தரவு நகலை இணைத்து டிவிட்டரில் கார்கே நேற்று முன்தினம் பதிவிடுகையில், ‘மோடி அரசின் 9 ஆண்டு சாதனையை விளக்குவதற்கு நாடு முழுவதும் 765 மாவட்டங்களில் சிறப்பு அதிகாரிகளை நியமிக்க நிதி அமைச்சகம் சார்பில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதில், இணை செயலாளர், இயக்குனர்,துணை செயலாளர் அந்தஸ்திலான அதிகாரிகள் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இது சிவில் சர்வீஸ் விதிகள் 1964 ன் பிரிவை மீறுவதாகும். குறிப்பிட்ட அந்த விதியின்படி அரசியல் விஷயங்களில் அதிகாரிகள் தலையிடக்கூடாது. அரசின் திட்டங்களை கொண்டாடுவது மற்றும் அதனை காட்சிப்படுத்துவது கட்சி தொண்டர்களின் பணியாகும். இந்த பணிக்கு அதிகாரிகளை அனுப்பினால் அடுத்த 6 மாதங்களுக்கு அரசு இயந்திரம் முடங்கி விடும். ஜனநாயகத்தையும்,அரசியல் சட்டத்தையும் பாதுகாக்க இந்த உத்தரவுகளை அரசுஉடனே வாபஸ் பெற வேண்டும்’ என குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்ட சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 24 -

இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்ட சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

23.10.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்டவும், வளர்ச்சியின் பலன்களை மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு கொண்டு செல்வதற்கும் சாதிவாரி கணக்கெடுப்பு மிகவும் அவசியமாகும். சாதி தொடர்பான தரவு, உள்ளீடுகளை கொண்டே சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டிட முடியும். இட ஒதுக்கீட்டில் ‘உள் ஒதுக்கீடு’ விவகாரங்களில் ஒரு தெளிவினை பெற முடியும். ஒரு மாநிலத்தில் அதன் தாய்மொழி பேசுவோர் எத்தனை சதம் உள்ளனர், பிறமொழி பேசுவோர் அங்கு எத்தனை சதம் வாழ்கின்றனர் என்பதை சாதி வாரி கணக்கெடுப்பின் மூலம் கண்டுணர முடியும். சாதி வாரியான கணக்கெடுப்பு இந்திய அளவில் எடுக்கப்பட்டால் மட்டுமே, இன்ன சாதிக்கு விகிதாச்சார அடிப்படையில் இவ்வளவு இட ஒதுக்கீடு என்பதை உணர்த்திட இயலும். மேலும் வாய்ப்பு கிடைக்காத சாதிகளுக்கும் கூட கணக்கெடுப்பு அடிப்படையில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

இந்தியாவை பொறுத்தவரை 1931ம் ஆண்டு சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கடந்த 90 ஆண்டுகளில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இக்காலக்கட்டத்திற்குள் நம் நாட்டின் மக்கள் தொகை மற்றும் சமூக பொருளாதார நிலப்பரப்பு பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. ஆனால், சமூகத்தின் பின்தங்கிய பிரிவினர் இன்னமும் பின்தங்கிய நிலையிலே உள்ளனர். பீகார் போன்ற சில மாநில அரசுகள் சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பை வெற்றிக்கரமாக நடத்தி முடித்துள்ளன. பீகாரின் சாதி வாரி கணக்கெடுப்பின்படி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 36 சதவீதம் அங்கு உள்ளனர். ஆனால், ஒன்றிய அரசின் 90 செயலாளர்களில் 3 பேர் மட்டுமே ஓபிசி வகுப்பை சேர்ந்தவர்களாக உள்ளனர். எனவே, இந்தியாவின் சாதி புள்ளி விபரங்களை வைத்து ‘அதிக மக்கள் தொகை, அதிக உரிமைகள்’ என்பதை கொண்டு வர வேண்டும் என ராகுல்காந்தி கேட்டுக் கொண்டார்.



தினகரன்

கணக்கெடுப்பு அவசியம்

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் சொற்ப எண்ணிக்கையில் இருப்பவர்கள் அதிகாரங்களை அனுபவித்து வருவதும், திரளாக இருப்பவர்கள் இன்னமும் பின்தங்கிய நிலையில், சமூகத்தில் அந்தஸ்து கிட்டாமல் இருப்பதும் உண்மை.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, சமூக, பொருளாதார தரவுகள் சேகரிக்கப்பட்டாலும், சாதி வாரியான விபரங்கள் பெறப்படவில்லை. இந்தியாவில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை கொண்டு செல்லவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிய பிரதிநிதித்துவம் பெறவும் சாதி வாரியான துல்லியமான கணக்கெடுப்புகள் இப்போது தேவையாக உள்ளது. இந்தியாவில் 2021க்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு இன்னமும் நடைபெறவில்லை. விரைவில் நடக்க உள்ள தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்போடு, சாதி வாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டும் என பல மாநிலங்களும் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்து வருகின்றன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுகுறித்து பிரதமர் மோடிக்கு கடிதமும் எழுதியுள்ளார். சாதி தொடர்பான தரவு உள்ளீடுகளுடன் இந்திய சட்டபூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு மட்டுமே சமூக நீதியை நிலை நிறுத்துவதற்கான பொருத்தமான தளமாக இருக்கும். இதன்மூலம் சமூகத்தின் சாதி அமைப்பு மற்றும் சமூக பொருளாதார விழுமியங்களை நாம் நேரடியாக பெறுவதோடு, விரிவான, நம்பகமான தகவல்களையும் பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அர. நடராசன்

**அக்டோபர் 24 (1987)**



இளம்வயதிலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கிளைச் செயலாளர், உப்பிலியாபுரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.

நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மத அடையாள தேசம்: உருவாகிவிட்ட யூத இஸ்ரேலும் - இந்துத்துவம் உருவாக்க விரும்பும் இந்து இந்தியாவும்!

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

**அறுபதுகள், எழுபதுகளில் கோடை விடுமுறை என்றால் ‘டென் கமாண்ட்மென்ட்ஸ்’ (Ten Commandments, 1956) படத்தை திரையரங்குகளில் திரையிடுவார்கள். பள்ளி மாணவர்களை பெற்றோர் கூட்டிச் செல்வார்கள் என்பதால். எகிப்தில் அடிமைகளாக இருந்த யூதர்களை மோசஸ் கடவுளின் துணையுடன் விடுவித்து அவர்களுக்கு கடவுளால் வாக்களிக்கப்பட்ட நிலமான இஸ்ரேலுக்கு கூட்டிச் செல்வதுதான் கதை. மோசஸ் குழந்தையாக ஆற்றில் விடப்பட்டு எகிப்து இளவரசியால் கண்டெடுக்கப்பட்டு, அரச குடும்பத்தில் வளர்வார், கர்ணனைப் போல. பின்னர் உண்மை வெளிப்பட்டு, நாட்டைவிட்டு துரத்தப்படுவார். அலைந்து திரிந்து சினாய் மலையில் ஏறி கடவுளின் குரலைக் கேட்பார். கடவுள் கட்டளைப்படி எகிப்து சென்று மன்னருடன் வாதாடி, பலவித உற்பாதங்களைத் தோற்றுவித்து, பெருந்திரளான அடிமைகளுடன் வெளியேறுவார். அவர்கள் செங்கடலை நெருங்கும்போது மன்னனின் படைகள் துரத்திக்கொண்டு வரும். மோசஸ் கோலை உயர்த்த செங்கடல் இரண்டாகப் பிரிந்து வழிவிடும். இந்தக் காட்சிக்கு அரங்கில் பெரும் கரவொலி எழும்பும். அந்தக் கடல் பிரிந்து கொடுத்த வழியில் யூதர்கள் கடந்து அக்கரை சென்ற பின், துரத்திக்கொண்டு வரும் மன்னனின் படைகள் அதில் இறங்கியவுடன் கடல் மூடிக்கொண்டு அவர்களை மூழ்கடித்துவிடும். இப்படி யாகத் தப்பி வந்த மக்களுக்கு மோசஸ் மூலமாக பத்து கட்டளைகளை கடவுள் கொடுப்பார். அதன்படி வாழ்ந்தால் அவர்**




**களுக்கு வாழ்வதற்கு ஒரு நிலத்தைத் தருவதாகக் கூறுவார். அப்படி வாக்களிக்கப்பட்ட நிலம், Promised land என்பதுதான் இஸ்ரேல் என்று இப்போது அழைக்கப்படும் பாலஸ்தீனம் என்பது புராணம், நம்பிக்கை.**

யூதர்களின் டோரா, பைபிள் உள்ளிட்ட மத நூல்களில் குறிப்பிடப்படும் இந்த கதைக்கு வரலாற்று ஆதாரம் எதுவும் கிடையாது. கிடைத்துள்ள வரலாற்று ஆதாரங்களின்படி சிந்தித்தால் அப்படியெல்லாம் நடந்திருக்கும் சாத்தியம் அதிகமாக இல்லை. ஆனால், ஏசு கிறிஸ்து பிறந்த நேரத்தில், கிறிஸ்துவ மதம் தோன்றிய நேரத்தில் யூதர்கள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தார்கள் என்பது உண்மை. கிறிஸ்து பிறப்புக்கு பிறகான நானூறு, ஐந்நூறு ஆண்டுக் காலத்தில் அவர்கள் அங்கிருந்து வெளியேறி ஐரோப்பா முழுவதும் பரவி பல்வேறு நாடுகளில் வசிக்கத் தொட ங்கினார்கள். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அரேபியர்கள் பெருமளவு இஸ்லாமிய மதத்தை தழுவினார்கள்.

பொது ஆண்டு 500 முதல் பொது ஆண்டு 1900 வரை பல்வேறு நாடுகளில் வாழ்ந்த யூதர்கள் பாலஸ்தீனம்தான் சொந்த ஊர் என்று எண்ணி வந்தார்கள் என்று கிடையாது. அவர்கள் குடியேறிய நாடுகளில் வர்த்தகம் செய்தும், வட்டித் தொழில், வங்கித்தொழில் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டும் வாழ்ந்தார்கள். ஆனால் இவர்களுக்கும், பொது சமூகத்துக்கும் இடைவெளியும், முரண்பாடுகளும் நிலவி வந்ததும், யூதர்களுக்கு எதிரான வன்முறை, சமூக விலக்கம், கட்டாய வெளியேற்றம் ஆகிய அவ்வப்போது நிகழ்ந்ததும் உண்மைதான். இதன் உச்சகட்டமாகத்தான் ஹிட்லரால் லட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்ட கொடூர சம்பவம் இரண்டாம் உலகப் போர் நேரத்தில் நிகழ்ந்தது.




**புராணத்தை வரலாற்றாக்கிய தீர்வு**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே யூதர்களுக்கென ஒரு நாடு தேவை என்ற எண்ணம் உருவாகத் தோன்றியது. கடவுள் யெஹோவாவால் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி எனப்படும் இஸ்ரேல்/பாலஸ்தீனம்தான் அது என்ற சிந்தனையும் உருவானது. இந்த சிந்தனையால் பல்வேறு நாடுகளில் வசிக்கும் யூதர்களுக்கும் அவர்கள் பல தலைமுறைகளாக பார்த்தே இராத, நினைத்தே இராத பாலஸ்தீனம் அவர்களது சொந்த ஊர், உரிமையுள்ள நிலம் என்ற எண்ணம் உருவாகத் தொடங்கியது. இதன் உச்சமாகத்தான் இஸ்ரேல் என்ற நாடு இங்கிலாந்தால் உருவாக்கப்பட்டதும், உலகின் பல பகுதிகளிலிருந்தும் யூதர்களுக்கு அந்த நாட்டுக்கு “திரும்பி வரும் உரிமை” (Right to Return) வழங்கப்பட்டதும் நடந்தது. அதாவது எத்தனையோ தலைமுறைகளாக ஃபிரான்சிலோ, அமெரிக்காவிலோ வாழ்ந்து வரும் வம்சாவழியைச் சேர்ந்த யூதர் ஒருவர் இஸ்ரேலுக்குச் சென்று குடியேற நினைத்தால் அது ‘திரும்பிச் செல்வதாக’க் கருதப்படும்.




**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*

இந்த முரண்பாட்டை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், இலங்கையின் மலையகத் தமிழர்களை யோசித்துப் பாருங்கள். அவர்கள் நூறு முதல் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தேயிலைத் தோட்ட த்தில் வேலை செய்ய தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்களின் வம்சாவழிகள்தான். அவர்கள் அனைவரும் தமிழ்நாட்டுக்கு ‘திரும்பி வரும் உரிமை’ கோர முடியுமா? சாஸ்திரிசிரிமாவோ 1964 ஒப்பந்தத்தின்படி திரும்ப வர ஏற்கப்பட்டவர்களிலேயே பலர் தமிழ்நாட்டுக்கு வந்த பின்னும் குடியுரிமை இல்லாமல் அவதிப்பட்ட கதை பேசப்பட வேண்டியது. இப்படி நன்றாக அறியப்பட்ட வரலாற்றில் இடம் பெயர்ந்தவர்களின் சந்ததியருக்கே திரும்பி வரும் உரிமை இல்லாதபோது, எத்தனையோ நூற்றாண்களுக்கு முன்னால் சென்றிருக்கலாம் என யூகி க்கப்படுபவர்களின் சந்ததியருக்கு ‘திரும்பி வரும் உரிமை’ வழங்குவது எவ்வளவு முரண்பாடானது.

**இஸ்ரேல் நாட்டினை எதிர்க்கும் சனாதன யூதர்கள்**

**சனாதனம் என்றால் மாறாதது என்று பலரும் கூறுவதை சமீப காலங்களில் கேட்டுள்ளோம். அதனால் மாற்றங்களை விரும்பாதவரை சனாதனி என்று கூறுகிறோம். பொதுவாக இவர்கள் பிற்போக்காளர்களாக இருப்பார்கள். ஆனால், யூதர்கள் விஷயத்தில் ஒரு சுவாரஸ்யமான முரண் ஏற்படுகிறது. யூத மத நம்பிக்கையில் ஒரு பகுதி கடவுளின் கட்டளைகளை யூதர்கள் பின்பற்றாததால், அவர்களுக்குத் தருவதாகச் சொன்ன பூமி வழங்கப்படவில்லை என்பதாகும். அதனால் அவர்கள் பல்வேறு நாடுகளிலும் வாழ்வதுதான் சரியே தவிர, தங்களுக்கென ஒரு நாடு என இஸ்ரேலை உருவாக்கியதும், அந்த நிலத்திலிருந்து பாலஸ்தீனியர்களை அகற்றியதும் தவறு என்பது சனாதன யூதர்களில் ஒரு பிரிவினரின் கருத்து.**

யூதர்களின் சம்பிரதாயப்படி ஆண்கள் தாடி வளர்த்து கறுப்பு ஆடையும், கறுப்புத் தொப்பியும் அணிய வேண்டும். அவ்வாறு மத வழக்கத்தை தீவிரமாக பின்பற்றும் சனாதன யூதர்கள் இஸ்ரேலுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி நியூயார்க்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை நான் பலமுறை கண்டுள்ளேன். நீங்களும் இங்கே இணைக்கப்பட்டுள்ள படத்தில் காணலாம். பல நேரம் இவர்கள் ‘JEWS AGAINST OCCUPATION’ என்ற பதாகையையும் பிடித்திருப்பர். அதாவது இஸ்ரேல் நாடு என்பது பாலஸ்தீனியர்களின் நிலத்தை ஆக்கிரமித்துள்ளது என்பதே பொருள். கீழேயுள்ள படத்தில் டோரா என்ற யூதர்களின் புனித நூல் பாலஸ்தீனம் முழுவதையும் பாலஸ்தீனியர்களின் இறையாண்மைக்கு விட்டுவிட வேண்டும் எனக் கூறுவதாக ஒரு பதாகையை ஏந்தியுள்ளதைக் காணலாம்.



**இந்தியாவில் சனாதனிகள் இப்போது மிகுந்த ஆவேசத்துடன் சனாதன எதிர்ப்பாளர்களைக் கண்டித்துப் பேசுகிறார்கள். சனாதனம் என்றால் அது வர்ணாசிரம தர்மம் அல்ல, தீண்டாமை அல்ல என்று சொல்கிறார்கள். அவர்களெல்லாம் இது போல “ஜாதி மறுப்பே சனாதனம்”, “வர்ண பேதம் கடவுளுக்கே அடுக்காது”, “உங்கள் ஜாதிக்குள் திருமணம் செய்யாதீர்கள்”, “ஜாதிக்குள் திருமணம் செய்ய கட்டாயப்படுத்துவது அதர்மம்”, “பார்ப்பனர்கள் யாருக்கும் உயர்ந்தவர்கள் அல்ல”, “சனாதனம் ஜாதீயத்தை எதிர்க்கிறது”, “தீண்டாமை என்பது கொடிய பாவம்” என்றெல்லாம் பதாகைகளைப் பிடித்துக்கொண்டு ஊர்வலம் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதுவும் விபூதி, திருமண் முதலிய சின்னங்களை நெற்றியில் அணிந்து, குடுமி வைத்தவர்கள் இப்படியெல்லாம் பதாகைகளை**



**ஏந்தி வந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனால் அப்படியெல்லாம் இவர்கள் செய்வதில்லை. சனாதனம் என்றால் இதுதான், சனாதனம் என்றால் அதுதான் என்று வாயினால் பசப்புகிறார்களே தவிர, திட்டவட்டமாக களத்தில் இறங்கி ஜாதி மறுப்பு பிரச்சாரம் செய்வதில்லை. சனாதன யூதர்களைப் பாருங்கள். பாலஸ்தீனத்தை விடுவியுங்கள். பாலஸ் தீனியர்களிடம் இறையாண்மையைக் கொடுங்கள் என்று திட்டவட்டமாக கோருகிறார்கள்.**

**இந்துத்துவத்தின் புண்ணிய பூமி கருத்தாக்கம்**

யூதர்களுக்கு கடவுள் வாக்களித்த பூமி இஸ்ரேல் என்று சொன்னதால் எப்படி தேசம் என்ற நவீன அரசியல் அடையாளம், மதத்துடன் பிணைந்து கொண்டதோ, அது போன்றதுதான் சாவர்க்கர் புண்ணிய பூமி என்ற கருத்தாக்கத்தை உருவாக்கியதும். உண்மையில் இந்துத்துவத்தின் சாராம்சமே அதுதான். அதன்படி யார் ஒருவரின் புண்ணிய தலங்கள் இந்திய எல்லைக்குள் இருக்கிறதோ அவர்தான் இந்தியர். முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களின் புண்ணிய தலங்கள் இந்தியாவுக்கு வெளியே இருப்பதால் அவர்கள் இந்தியாவின் முழுமையான குடிமக்கள் கிடையாது. இவ்வாறு நாட்டின் குடியுரிமையை மதம் என்பதுடன் பிணைப்பதுதான் மத அடையாள தேசியம் ஆகும். அரசாங்கம் அதிகாரபூர்வ மதமாக ஒரு மதத்தை ஏற்பது என்பது கூட பிரச்சினை கிடையாது. குடியுரிமையை, குடிநபரின் வரையறையை மதம் என்பதுடன் இணைப்பதுதான் கடுமையான பிரச்சினை. ஆங்கிலத்தில் தேசம் என்ற வார்த்தையை ‘நேஷன்’ என்று கூறுகிறோம். இதன் மூலச் சொல் லத்தீன் மொழியில் பிறப்பினை குறிப்பதாகும். ஒருவரின் பிறப்பு சார்ந்ததே அவரது தேசம் என்பது.

உதாரணமாக அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் என்பவர் இருக்கிறார். இவரின் தாயார் சியாமளா சென்னையில் பிறந்தவர். தந்தை ஜமைக்காவில் பிறந்தவர். ஆனால், கமலா அமெரிக்காவில் பிறந்ததால் அந்த நாட்டின் குடிநபர் ஆகிறார். அதனால்தான் அவர் தேர்தலில் போட்டியிட முடிகிறது. துணை அதிபராக முடிகிறது. அமெரிக்காவில் பல இந்து கோயில்களைக் கட்டியுள்ளார்கள். இந்து மதத்தினரும் அங்கே அதிபர் தேர்தலில் பங்கேற்கிறார்கள். இங்கிலாந்து நாட்டின் பிரதமராக ஒரு இந்து, ரிஷி சுனக் இருக்கிறார். அவர் காசியை புண்ணிய தலமாக நினைத்தால் அது குறித்து இங்கிலாந்தில் யாரும் கவலைப்படவில்லை. மதத்துக்கும் குடியுரிமைக்கும் இந்த நாடுகள் முடிச்சுப் போடவில்லை.

ஆனால் சாவர்க்கரின் இந்துத்துவம் முடிச்சுப் போடுகிறது. இந்தியாவை புண்ணிய பூமியாகக் கொள்ளாதவர்கள் இந்திய குடிமக்களாக இருக்க முடியாது என்ற கருத்தை அது விதைக்கிறது. இஸ்ரேலின் அடிப்படையான மோசஸ் கதைபோல சாவர்க்கர் ராமாயணத்தைப் பயன்படுத்துகிறார். ராமர்தான் இந்தியாவை ஒரே நாடாக இணைத்தவர் என்று கூறுகிறார். ராமாயணம் ஒரு புராணக்கதையாகும். ஆதாரபூர்வமாக நிறுவப்பட்ட வரலாறு அல்ல. மேலும் வால்மீகி ராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை என்பது மத்தியப் பிரதேசத்தில் இருப்பதாகக் கருதும் ஆய்வாளர்கள் பலர் இருக்கிறார்கள்.

**புராணத்தை வரலாறாக ஆக்குவதிலும், மதத்தை தேசமாக ஆக்குவதிலும் இஸ்ரேலின் முன்மா திரிக்கும், இந்துத்துவ சிந்தனைக்கும் நிறைய ஒப்புமைகளைக் காணலாம். உள்ளபடி சொன்னால் குடியுரிமை சீர்திருத்தச் சட்டம் என்பது ஒருவகையில் இந்துக்களின் “திரும்ப வரும் உரிமை” எனலாம். பிற நாடுகளில் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் ஒருவர் இந்தியாவிடம் அடைக்கலம் கேட்டால் கொடுப்பதற்கான விதிமுறைகளை வகுக்காமல், இந்துக்களாக இருந்தால் குடியுரிமை வழங்கலாம், இஸ்லாமியர்கள் என்றால் முடியாது என்றெல்லாம் விதிமுறைகள் வகுப்பது குடியுரிமையையும், மதத்தையும் இணைக்கும் செயல் என்பதால்தான் போராட்டங்கள் வெடித்தன.**

இந்துத்துவ அணியினரின் வெளிப்படையான இஸ்ரேல் ஆதரவு என்பது, முஸ்லிம்களை பொது எதிரியாக காண்பதிலிருந்து, பலவகையான தொடர்பு புள்ளிகளைக் கொண்டது என்றே நினைக்கத் தோன்றுகிறது. இஸ்ரேல் மேலும் வலுப்பெறுவது இந்துத்துவர்களின் வேலை திட்டத்தை ஊக்கப்படுத்தவே செய்யும். ‘மதமே தேசம்! புராணமே வரலாறு’ என்ற முழக்கத்துக்கு இஸ்ரேல் மிகவும் அனுசரணையான சிறந்த முன்மாதிரி யாகும்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலக கலைஞர் அறிவாலயத்தில் இளைஞர் அணி, மாணவரணி மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் முன்னிலையில் “புன்னகை” கல்வி மாத இதழ் ஆசிரியர் திருஞானம் துவக்கி வைத்தார். நிகழ்வில் இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், மருத்துவ அணி மாவட்ட தலைவர் மாரிமுத்து, ஆவின் ஆறுமுகம், பூங்கோதை ஆலடி அருணா, ஆறுமுகசாமி செல்லத்துரை, ஷெரிப், கென்னடி, சிவக்குமார், ஐவேந்திரன் தினேஷ்,கிருஷ்ணராஜ், முஹம்மது அப்துல் ரஹீம், சுப்பிரமணியன், ராஜா, சுப்பையா, கார்த்திகா உள்பட கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.




மதுரை மாநகராட்சி கிழக்கு தொகுதிக்குட்பட்ட அய்யர் பங்களாவில் மாநகராட்சியில் முதன் முறையாக ரூபாய் 86 லட்சம் மதிப்பீட்டில புதிய ரக மண் கூட்டும் இயந்திரத்துடன் கூடிய வாகனத்தை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்த போது எடுத்த படம். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் மதுபாலன், மண்டல தலைவர் வாசுகி சசிக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருப்பாலை ராமமூர்த்தி, பால் செல்வி, பாபு, ரோகிணி பொம்மதேவன், செங்கிஸ்கான், செல்வகணபதி, ராதிகா மற்றும் அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சிவகங்கையில் மாநில இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் தமிழகத்திற்கு நீட்தேர்விலிருந்துவிலக்கு அளிக்கக்கோரி குடியரசுத் தலைவரை வலியுறுத்தும் 50லட்சம் அஞ்சல் அட்டை அனுப்பும் கையெழுத்து இயக்கத்தினைகூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். இதில் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, மாநில மாணவரணி இணைச்செயலாளர் பூரணசங்கீதா, காரைக்குடி நகர்மன்றத்தலைவர் சே.முத்துதுரை ஆகியோர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி,மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான் முன்னிலையில் சென்னை தெற்கு சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் துவக்கி வைத்தார். உடன் இளைஞர் அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை,கருப்பசாமி கோட்டையப்பன், மருத்துவ அணி அமைப்பாளர் கணேஷ் ராஜா, மாலை ராஜா,லட்சுமணன்,சுப்பிரமணியன், சரவணன், ராஜ், சுரேஷ், தர்மன், மீரான் மைதீன், நமச்சிவாயம் உள்பட கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

# நெல்லையில் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையம்!

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, அக்.23-

நெல்லையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மார்பகப் புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டு அதில் இருந்து மீண்ட பெண்களுக்கான வெற்றி விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையத்தை துவக்கி வைத்தார்.

நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மார்பக புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டு அதிலிருந்து மீண்ட பெண்களுக்கான வெற்றி விழா நிகழ்வு மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி பாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் பங்கேற்று புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையத்தை திறந்து வைத்தார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு செய்துள்ள நலத்திட்டங்களை பட்டியலிட்டு கூறலாம்.10,000ம் மக்களுக்கு ஒரு மருத்துவ இடம் என்ற அடிப்படையில் மக்கள் தொகைக்கு ஏற்றாற் போல் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி என முடிவு எடுத்து உள்ள நிலையில் இனிமேல் தமிழகத்திற்கு மருத்துவக் கல்லூரி அனுமதி கிடையாது. என்று ஒன்றிய அரசு குறுகிய மனப்பான்மையோடு செயல்படுகிறது. நீட் தேர்வில் மக்கள் பல லட்சம் ரூபாயை செலவு செய்து இதுபோன்ற மருத்துவ படிப்பிற்கு வரவேண்டிய நிலை இருக்கிறது.

தமிழகத்தில் சமச்சீர் கல்வி,மெட்ரிக் கல்வி என சிறப்பான கல்வி கட்டமைப்பு உள்ளது. அதை சீர்குலைப்பதற்காக ஒன்றிய அரசு நீட் தேர்வு புதிய கல்விக் கொள்கை ஆகியவற்றை கொண்டு வந்துள்ளது.தமிழகத்தில் சுகாதார துறையின் கட்டமைப்பு மிகவும் வலுவானதாக இருக்கிறது.ஒன்றிய அரசின் மத்திய பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் குடிமை பணி தேர்வுகளில் பல்வேறு முறைகேடுகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த முறைகேடுகள் களையப்பட்டால் தமிழ்நாட்டிலிருந்து அதிகமானோர் முதலிடத்துடன் தேர்ச்சி பெறுவார்கள்.

மேலும் மருத்துவ பட்ட மேற்படிப்பில் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாக 27 சதவீதம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இடம் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் இந்த முயற்சியால் தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் பயன்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்லூரி கண்காணிப்பாளர் மருத்துவர் சுப்பிரமணியன், ரபீக் மற்றும் செவிலியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மார்பக புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

## வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்! புயலாக வலுப்பெறும்!

சென்னை, அக்.24–

மத்திய மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுப்பெறக் கூடும் எனவும் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறும் எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு அரபி கடலில் நிலை கொண்டுள்ள ‘தேஜ்’ புயல் அதிதீவிர புயலாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தேஜ் புயல் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் அதிதீவிர புயலாக வலுப்பெற்று, தென்மேற்கு அரபி கடலில், சகோத்ரா (ஏமன்) நகருக்கு 330 கி.மீ. கிழக்கு தென்கிழக்கேயும், சலாலா (ஓமன்) நகருக்கு 690 கி.மீ. தெற்குதென்கிழக்கேயும் மற்றும் அல் கைடா (ஏமன்) நகருக்கு 720 கி.மீ. தென்கிழக்கேயும் மையம் கொண்டுள்ளது. இந்நிலையில் மத்திய மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுப்பெறக் கூடும் எனவும் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறும் எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் மதுரை சட்டக் கல்லூரியில் 21.10.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகை, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இதில் சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சரவணன், பா.கணேசன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவசேனன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றி கொண்டான், நன்மாறன் கலந்துகொண்டனர்.


# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி









கழகம் தொடங்கிய போது





இலட்சிய நடிகர்

**எஸ்.எஸ். இராஜேந்திரன் Ex. MP**

**24-10-2014**

இன்றும், என்றும் இதயம் நிறைந்த நினைவுடன்....

**எஸ்.எஸ்.ஆர். இராஜேந்திரகுமார் Ex. MP**

மற்றும் குடும்பத்தினர்

எஸ்.எஸ்.ஆர் பங்கஜம் சினிமாஸ், சாலிகிராமம்,

திரையரங்க வளாகத்தில் இன்று 5000 பேருக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும்.


மணமக்கள்
Dr.M.R.K.P.கண்மணி M.D.,
Dr.K.சித்தார்த் M.D.,
வரவேற்பு : 24 – 10 – 2023,
செவ்வாய்கிழமை, மாலை 6 மணி
மணநாள் : 25 – 10 – 2023,
புதன்கிழமை, காலை 9 – 10.30 மணி
இடம் : ஸ்ரீ ராமச்சந்திரா கன்வென்ஷன்
சென்டர், திருவான்மியூர், சென்னை
கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc., BL.,
அவர்களின் இல்லத் திருமண விழாவை தலைமையேற்று
நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்த வருகை தரும்
பாசமிகு கழகத் தலைவர் – மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களையும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
தி.மு.க.– தலைமை கழக நிர்வாகிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள்,
உள்ளாட்சி பிரதிநிதிகள், தோழமை கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக
முன்னணியினர் அனைவரையும் வருக.. வருக... என
அன்புடன் வரவேற்கிறோம்...
வணங்கி வரவேற்கும்...
கோ.ஐயப்பன் M.A., M.L.A.
கடலூர் சட்டமன்ற உறுப்பினர்
Dr.பிரவின் ஐயப்பன் M.S., ( Ortho )
Jayam Arts

# நாடு நலம் பெற
# பாடுபடும் வர்க்கம் பயன் பெற..!

■ நீரை.மகேந்திரன்





**1967**-ஆம் ஆண்டில், வாக்குச்சீட்டு மூலம் தமிழ்நாட்டில் நிகழ்ந்த அரசியல் புரட்சியை, 1971-ஆம் ஆண்டிலும் நிகழ்த்திக் காட்டின கலைஞரின் வாக்குறுதிகள். எனினும் அரசியல் சதுரங்க ஆட்டங்களில், 1977-ஆம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தல் மிக முக்கியமான பின்னடைவை தமிழ்நாட்டுக்கு உருவாக்கிவிட்டது.

அந்தத் தேர்தலின்போது தி.மு.க வெளியிட்ட தேர்தல் அறிக்கை இவ்வாறு பேசுகிறது:

“ தி.மு.கழகம் ஒரு மாநிலக் கட்சி என்றாலும், அகில இந்திய உணர்வுடனும், கண்ணோட்டத்துடனும் டெல்லி சர்வாதிகாரத்தை எதிர்த்து நடந்து முடிந்த இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் தனது கடமையைத் துணிவுடன் செய்து, அதற்கான மகத்தான விலையைக் கொடுத்திருப்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

நாஜிக்களின் கெஸ்டபோ ரகசிய போலீஸ் ஜெர்மானிய மக்களுக்கு அளித்த மனோரீதியான தொல்லைகளைப் போல, ரோம் சாம்ராஜ்யத்து கிறிஸ்தவர்களைப் போலவும், தென்னாப்பிரிக்கக் கருப்பர்களைப் போலவும் நிந்திக்கப்படுகிற இயக்க மான, வேட்டையாடப்படுகிற இயக்கமாகக் கழகம் இருந்தது. இந்திய அரசியல் வரலாற்றில் இத்தனை கொடுமைகள் வேறு எந்தக் கட்சிக்கும் ஏற்பட்டது கிடையாது.

இவ்வளவுக்குப் பிறகும் அறிஞர் அண்ணா உருவாக்கிய கழகம் கட்டுக்கோப்புக் குறையாமல் இந்தத் தேர்தலையும் தனித்து நின்று சந்திக்கிறது என்றால், அதற்கு கொள்கை உரம் படைத்த கழகச் செயல் வீரர்கள்தான் காரணம் எனக் குறிப்பிட்டதுடன், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் மாநிலக் கட்சியாகப் பல திட்டங்களைத் தொடங்கி வைத்த ஒரே கட்சி தி.மு.கழகம் என்பதையும் சட்டமன்றத் தேர்தல் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

## வகுப்புவாதத்துக்கு எதிராக முதல் குரல்

1980-ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் தலைதூக்கத் தொடங்கிய வகுப்புவாத அரசியலுக்கு எதிர்வினையாற்றிய கட்சியாக தி.மு.க இருந்ததைத் தேர்தல் அறிக்கையிலும் காணமுடிகிறது.

1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் இந்திய ஜனநாயகத்தில் தலைதூக்கும் புதிய அபாயம் என வகுப்புவாத அரசியலைக் கண்டித்துள்ளது.

‘எமர்ஜென்சி’ என்பது ஜன நாயகத்தில் ஏற்பட்ட தடுமாற்றம்! அது தற்காலிகமானது! மக்களால் மாற்றப்படக்கூடியது! மாற்றப்பட்டது! ஆனால், வகுப்புவாதம்? ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் வகுப்புவாத வெறித்தனமான கொள்கை, மக்களை மூளைச்சலவை செய்து நடைமுறையில் ஒரு சாராரை நிரந்தரமான சர்வாதி காரத்தில் அல்லவா கொண்டு போய் நிறுத்தி விடும்?

**வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக வலுவான கூட்டணியை உருவாக்குவதில், கழகம் கொண்டிருக்கும் கொள்கை உறுதி தேர்தல் வாக்குறுதியாகவே எழுகிறது.**

இந்து ராஷ்ட்ரிய திட்டம் ஒரு அபாய அறிகுறி அல்லவா? இந்தக் கண்மூடித்தனமான வகுப்புவாதக் கொள்கைகளை வேரூன்றவிட மாட்டோம், விடவே மாட்டோம் என தி.மு.க உறுதி எடுத்துக் கொள்கிறது” என்றது.

நாற்பது ஆண்டுகளைக் கடந்தும் இந்த உறுதியில் இருந்து தி.மு.க வழுவியதில்லை என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக வலுவான கூட்டணியை உருவாக்குவதில், கழகம் கொண்டிருக்கும் கொள்கை உறுதி தேர்தல் வாக்குறுதியாகவே எழுகிறது.

## தமிழும் விஞ்ஞானமும்

1980-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் கழகத்தின் வாக்குறுதிகளில் கவனிக்கத்தக்க ஒன்று “விஞ்ஞான யுகத்துக்கு ஏற்ற வகையில், தமிழ்மொழியைப் பல்வேறு துறைகளில் வளர்க்கவும், பயன்படுத்தவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைத்திட அனைத்து ஏற்பாடுகளையும் விரைந்து செயல்படுத்துவோம்” என்கிறது.

இந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம், எம்.ஜி.ஆர் அரசுக்கு ஏற்பட்டது. ஆனால், தி.மு.க ஆட்சிகாலத்தில்தான் தமிழ்ப் பல்கலையின் செயல்கள் வேகம்கண்டன என்பது தமிழ்ச் சான்றோர் அறிவர்.

அதுபோல, விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப தமிழைக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற தொலைநோக்குதான் இன்று இணைய உலகில் தமிழ்மொழியின் வளர்ச்சியும் வேகமும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தனது ஆட்சிக் காலங்களில் அதைச் செயல்படுத்தும் முனைப்பையும் கலைஞர் கொண்டிருந்தார்.

1984 -ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் கவனம் குவித்துள்ளது. “இன்னுயிர் தந்தேனும் இலங்கைத் தமிழரைக் காப்போம்” என தேர்தல் அறிக்கை சிறப்பு மாநாட்டில் உரையாற்றி இருக்கிறார் கலைஞர்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய அரசு சர்வதேச கருத்தைத் திரட்டாமல் இருப்பதற்கான கண்டனத்தை வெளிப்படுத்தி இருந்தது. எம்.ஜி.ஆரின் உடல்நிலை குறித்த உண்மையை, உலகுக்கு அறிவிப்போம் என்கிற ஒரு வாக்குறுதியும் உள்ளது.

## நலிவு தீரும்

1989-ஆம் ஆண்டு அறிக்கை “கூட்டாட்சிக்கு குரல் கொடுப்போம், காட்டாச்சிக்கு விடை கொடுப்போம்” என்றும், “யாரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தால், நாடு வாழும், நலிவு தீரும்” என்றும் பேசி இருக்கிறது.

அந்தத் தேர்தல் அறிக்கையும் மாநில உரிமை பேசியது. “நமது மாபெரும் நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தவும், விரிவாக்கவும் உண்மையான கூட்டாட்சி முறையினால் மட்டுமே முடியும் என்று உறுதியாக நாங்கள் நம்புகிறோம்.

மாநிலங்களைப் பலப்படுத்துவது, ஒன்றிய அரசை பலவீனப்படுத்துவதாக என்று அர்த்தமில்லை, அதற்கு மாறாக மாநிலங்களைப் பலப்படுத்துவதன் மூலமாகவே ஒன்றிய அரசு தனது திட்டங்களைச் சரிவர நிறைவேற்ற முடியும்” என்றும் அறிக்கை வலுவாகப் பேசியது.

ஒன்றிய அரசின் முன்னால், மாநிலங்கள் சுயமரியாதை இழந்து பிச்சைப் பாத்திரத்துடன் கெஞ்சி நிற்கும் நிலையை மாற்றி, அவை உண்மையான சுயாட்சி பெற வேண்டும் எனப் பேசியது 1989-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. கொண்ட கொள்கையில் நழுவாமல் அந்தக் கோரிக்கைக்கு இப்போதும் உயிர் கொடுத்துக் கொண்டிருப்பதுடன், அதற்குக் குரல் கொடுத்து, களத்தில் நிற்கவும் செய்யும் ஒரே மாநிலக் கட்சியாகத் தி.மு.க.வை மட்டுமே சொல்ல முடிகிறது.

1989-சட்டமன்றத் தேர்தலில் குறிப்பிட வேண்டிய விஷயம், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசம். இந்த அறிவிப்பு அதற்கு முன் பி. யு. சி. கல்வி வரை இலவசமாக இருந்தது. கல்விக் கட்டமைப்பில் அடுத்தத் தலைமுறையை நகர்த்த வேண்டிய அவசியத்தை அந்தத் தேர்தல் அறிக்கையில் பேசினார் கலைஞர்.

முறைசாரா தொழிலாளர்களின் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், காப்பீடு மற்றும் இறப்பின் போது உதவித்தொகை சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவது, முதியோர் ஓய்வூதிய திட்டம் 20 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு மருத்துவமனை, அவற்றில் இலவச மருந்துகள் என மாபெரும் முன்னெடுப்பை 89 தேர்தல் உறுதி செய்கிறது.

“நாடு நலம் பெற பாடுபடும் வர்க்கம் பயன் பெற” என்றது 1991-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. ஆறு மாதக் குழந்தையிலிருந்து ஊட்டச்சத்து அளிக்க மாபெரும் திட்டத்துக்கு முன்னறிவிப்பு செய்கிறார். ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பத்துப் பெண் பிள்ளைகளுக்கு மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வி இலவசமாக வழங்கப்படும் என்கிறார்.

## மாநில உரிமைகளின் முழக்கம்

கழகத்தின் எல்லா தேர்தல் அறிக்கைகளும் மாநில சுயாட்சியை வலியுறுத்துகின்றன. இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காத்திட, ஒற்றுமையை ஆழமான அடித்தளத்தில் அமைத்திட முனைகிறது.

“முழுமையான, உண்மையான கூட்டாட்சி முறையை, மாநில சுயாட்சி அடிப்படையிலான அரசு என்று சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கழகம் தொடர்ந்து போராடும்” என 1996-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை பேசுகிறது. அந்நிய ஏகாதிபத்திய முறையில் ஒன்றிய அரசு இயங்கி வருவது மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது.

அப்போது உருவாகியிருந்த புதிய போக்குகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது கழகத்தின் தேர்தல் அறிக்கை.

“புதிய பொருளாதாரக் கொள்கை ஏழை எளியோரையும், தொழிலாளிகளையும் விவசாயி களையும், நலிந்த பிரிவினரையும், நடுத்தர வர்க்கத்தோரையும் மேலும் ஏழ்மையில் ஆழ்த்தும். எனவே புதிய பொருளாதாரக் கொள்கையைத் திருத்தி அமைக்க வலியுறுத்துவோம். எளிய மக்களைப் பாதிக்காத வகையில் பாதுகாப்பு வளையம் (SAFETY NET) உருவாக்குவோம் என்கிறது.

அப்போது ஆட்சி அமைத்த கழக அரசுதான் புத்தாயிரமாண்டின் நவீன வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ப தமிழ்நாட்டை வடிவமைத்தது. அந்தப் பாதுகாப்பு வளையத்தில்தான் இப்போது நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.

...தொடரும்.

## திராவிட இயக்க இதழ்கள் - திராவிட சினிமா



இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ் ‘திராவிட சினிமா’. 1955-ஆம் ஆண்டு சென்னையில் இருந்து வெளிவந்த இந்த இதழ் வார இதழாக மலர்ந்தது.

இதழின் முகப்புக்கு கீழே **‘தென்னகத்தின் ஒரே ஒரு கலை வார ஏடு’** என்ற அறிவிப்புடன் ஒரு அணா விலையில் விற்பனை செய்யப்பட்டது இந்த இதழ். படத்தில் காண்பது 1956 -ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் தேதியிட்ட இதழ். இதில் ஆசைத்தம்பியின் கதை வசனத்தில் உருவான **‘வாழ்விலே ஒரு நாள்’** படம் பற்றிய விமர்சனம் வெளிவந்துள்ளது. அந்த இதழில் வெளியான கேள்வி பதில் பகுதியில் ஒன்று:

“ஷேக்ஸ்பியர், பெர்னாட்ஷா ஆகியவர்களைப் போலச் சிறந்த நாவல் கதைகளை இயற்று பவர்கள் தற்போது நமது நாட்டில் யார் யார்?”

“எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஒருமுறை கல்கி, அண்ணாவை ‘தமிழ்நாட்டு பெர்னாட்ஷா’ என்று சொல்லியிருப்பது தங்களுக்குத் தெரியாதா?” என்கிறது.

சுவாரஸ்யமான சினிமா செய்திகளுடன், சினிமா விமர்சனம், உலகச் சினிமா தொடர்பான துணுக்குகள், சினிமா தொடர்பான கேள்வி பதில் போன்றவற்றைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்தது.

## ப்ளாஷ்பேக்



### திருமணத்தில் தமிழீழம்!

எனது தந்தை கோ.சக்திவேல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ஆவார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு திருவோணம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கி னார். 1984-ஆம் ஆண்டு எனது தாய்-தந்தையின் திருமண விழாவை எங்கள் இல்லத்துக்கே வந்து தலைவர் நடத்தி வைத்து, ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து உரையாற்றியதாகப் பெற்றோர் கூறி கேள்விப்பட்டிருக்கிறேன். மூத்த நிர்வாகி எல்.கணேசன், அப்போதைய தஞ்சை நகரச் செயலாளர் பூபதி, திருவோணம் ஒன்றியச் செயலாளர் முத்துச்சாமி ஆகியோர் உடனி ருந்தார்கள்.



கரிகாலன்

**-ச.கரிகாலன், பின்னையூர், ஒரத்தநாடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உத்தமர் சங்கரலிங்கனார்!

**1956-ஆம் ஆண்டு ஜூலையில் ‘தமிழ்நாடு’ என சென்னை மாகாணத்துக்கு பெயர் சூட்ட வேண்டும் என்கிற கோரிக்கையுடன் தியாகி சங்கரலிங்கனார் உண்ணா விரதம் தொடங்கினார். அறிஞர் அண்ணா, ம.பொ.சி ஆகியோர் உண்ணா விரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டும், அவர் தனது போராட்டத்தைக் கைவிடவில்லை. தொடர் உண்ணா விரதத்தால் உடல் நலிவடைந்து, செப்டம்பரில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், அக்டோபர் 13-ஆம் தேதி உயிரிழந்தார். ‘உத்தமர் சங்கர லிங்கனார்’ என தலைப்பிட்டு ‘நம்நாடு’ இதழ் வீரவணக்கம் செலுத்தியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 279




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131